முகப்பு:

அருள்மிகு சமயபுரம் மாரியம்மன்

திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, உத்தமர் காந்தி நெடுஞ்சாலை,
சென்னை — 600 034
தொலைபேசி எண்: 479407

ஆசிரியர்:
கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A.,Ph.D.

மாலை. 34	திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆங்கீரச ஆண்டு ஆடி ஜூலை 1992 விலை ரூ. 3-00	மணி: 7

R. RAJU,
Dy Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept

திருக்கோயில் வாசகர்களுக்கு அறிவிப்பு

அன்பு வாசகர்களே! வணக்கம்

திருக்கோயில் திங்கள் இதழின் உறுப்பினர்களாகச் சேர விருப்பம் உள்ளவர்கள்

உயர்திரு ஆணையர் அவர்கள்
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை
சென்னை — 600 034

என்ற முகவரிக்கு பணவிடை அல்லது வங்கி வரைவோலை மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

சந்தா விவரம்

அரை ஆண்டு	—	ரூ.	18-00
ஓர் ஆண்டு	—	ரூ.	36-00
ஆயுள்	—	ரூ.	300-00

சந்தாதாரர்கள் முழுமுகவரியைத் தெரிவிக்க வேண்டும். முகவரியில் மாற்றம் இருப்பின் உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.

பொருளடக்கம்

திருக்கோயில் நிர்வாக வாரியக் கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை.

அருளாளர்களின் அருள் உள்ளம்
— திருமந்திரச் செம்மல் டி.வி. வெங்கட்ராமன் ஐ.ஏ.எஸ். அவர்கள்

நூல்மதிப்புரை
— நிறைமதி

பரசுராமர்
— ஜெயஸ்ரீ மூகாம்பிகா

அறுபத்து மூவர் அளப்பிலாப் பெருமை
— டாக்டர் மா. இராசமாணிக்கனார்

திருச்செங்காட்டங்குடி
— புலவர் பொன் திருக்கண்ணபுர சுப்பிரமணியன்

கீதைக் குறள்கள்
— அறநெறியண்ணல் கி. பழநியப்பனார்

திருவிற்குடி வீரட்டானம்
— தி. இராச மாணிக்கம் பி.ஏ. பி.காம்.

ஆடல் காணீரோ திருவிளையாடல் காணீரோ
— கம்பன் கவநயமணி வே. தியாகராஜன்

சித்திரபாரதம்
—செவ்வேள்

கந்தவேள் கருணை
—டாக்டர் திருமுருக கிருபானந்தவாரியார்

திருக்கோயில் நிர்வாக வாரியக் கூட்டத்தில்

மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி **ஜெ. ஜெயலலிதா** அவர்கள்

ஆற்றிய உரை.

எங்கள் தேர்தல் அறிக்கையில் தெரிவித்தபடி இந்த அரசு பொறுப்பேற்ற பின்னர் இந்து சமய அறக்கட்டளை சட்ட திருத்தம் செய்யப்பட்டுள்ளது. அதன் மூலம் தமிழ் நாட்டிலுள்ள திருக்கோவில்களின் நிர்வாகத்தினை மேம்படுத்துவதற்காக மாநில அளவில் திருக்கோவில் நிர்வாக வாரியமும், மாவட்ட அளவில் மாவட்ட குழுக்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்பதனை நீங்கள் அனைவரும் அறிவீர்கள்.

இந்தக் கூட்டம் கூட்டப்பட்டதனுடைய அடிப்படை நோக்கம் உங்கள் அனைவருக்கும் தெரியும்.

தமிழ்நாட்டில் பரந்து கிடக்கும் பல ஆயிரக்கணக்கான திருக்கோவில்கள் நமது நாட்டின் கலைப் பொக்கிஷங்களாகும்; புராதன கலைச் செல்வங்களாகும்.

இவைகளைப் பேணிப் பாதுகாத்து, நமது வருங்கால சந்ததியினருக்கு ஒப்படைப்பது நமது தலையாய கடமையாகும். இத் திருக்கோவில்களில் ஆங்காங்கே நடைபெற வேண்டிய அன்றாட பூஜைகள், மாத வருடாந்திர திருவிழாக்கள் ஆகியவைகளை அந்தந்த திருக்கோவில்களின் பழக்க வழக்கங்களையொட்டி நடைபெறச் செய்ய வேண்டியது அவசியமான காரியமாகும்.

இந்த திருக்கோவில்களுக்கு பல மன்னர்களாலும், பல தர்ம சிந்தனை கொண்டவர்களாலும் அளிக்கப்பட்ட சொத்துக்களை, அவைகள் எந்த நோக்கத்திற்காக அளிக்கப்பட்டனவோ, அந்த நோக்கங்களை நிறைவேற்றுவதன் பொருட்டு, அந்த சொத்துக்களைப் பாதுகாத்து, அவைகளில் இருந்து தற்கால நிலவரத்திற்கேற்ப உரிய வருவாய் கிடைக்க, அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டியது மிகஅவசியமாகும்.

கடந்த கால நிகழ்வுகளைப் பார்க்கும் போது, திருக்கோவில்களுக்குரிய சொத்துக்கள் முறையாகப் பேணிக் காக்கப்படாததோடு, திருக்கோவில்களின் சொத்துக்களிலிருந்து கிடைக்க வேண்டிய வருவாயும் வராமல் இருந்து வந்துள்ளது நமது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. எனவே இந்த அவல நிலையைப் போக்கிட அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டியது தற்போது காலத்தின் கட்டாயமாகும்.

திருக்கோவில்கள் நாம் வழிபாடு செய்யும் தெய்வங்களின் உறைவிடங்களாக இருப்பவை. எனவே, ஆகம விதிகளின்படி 12 ஆண்டுகட்கு ஒருமுறை, இத்திருக்கோவில்களைத் திருப்பணி செய்து குடமுழுக்கு விழா நடத்துவதே முறையான அணுகுமுறையாகும். இந்த புனிதமான செயல்களின் மூலம், அந்தந்த தெய்வங்களின் சக்தியை விளங்கச் செய்வதற்கும், பக்தர்கள் இறை வழிபாட்டில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள இந்த திருக்கோவில்களைத் திருப்பணி செய்வதற்கான பணியினை மேற்கொள்ள வேண்டியதும், நமது முக்கிய கடமைகளில் ஒன்றாகும்.

இப்பணியில் அரசு மட்டுமே முழுமையாக ஈடுபடுவது இயலாத காரியம். எனவே,

அனைத்து பக்தர்களும் இப்பணிகளில தங்களை ஈடுபடுத்திக் கொள்வதும், இந்த முயற்சிகளில் பங்கேற்றுக் கொள்வதும், நல்ல பலனைத்தரும் என நான் எண்ணுகிறேன். இத்தகைய திருக்கோவில்களின் திருப்பணிகளை மேற்கொள்வதற்கு, பொது மக்கள் கணிசமாக நன்கொடை வழங்கி வருவது, தற்போது நடைமுறையில் இருந்து வருகிற பழக்கம். அதனால் தான் இந்த முயற்சிக்கு உதவுகின்ற வகையில், இந்த அரசு பொறுப்பு ஏற்ற பின்னர், ''முதல்அமைச்சர் திருக்கோவில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி' என்ற ஒரு நிதியினை ஏற்படுத்திப்பொது மக்களிடம் நன்கொடைகளைப் பெற்று வருகிறது.

இந்த நிதிக்கு தயாள குணம் கொண்ட பல்வேறு பிரிவினரிடமிருந்து இதுவரை ரூ. 4 கோடியே 15 இலட்சம் நிதி உதவி பெறப்பட்டுள்ளது என்பதை இங்கே நான் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பாடல் பெற்ற மற்றும் மங்களாசாசனம் செய்யப் பெற்ற 35 (முப்பத்தைந்து) திருக்கோவில்களின் திருப்பணிக்காக, இந்த ஆண்டு ரூபாய் 50 இலட்சம் நிதியுதவி அளிக்கப்படும் என்று கடந்த சட்டமன்ற கூட்டத் தொடரின் அறநிலையத்துறை மானியக் கோரிக்கையின் போது நான் அறிவித்தேன். 35 திருக்கோவில்களின் திருப்பணிகள் நடைபெற இந்த நிதி பெரும் அளவில் உதவி வருகிறது என்பதை மகிழ்ச்சியோடு குறிப்பிட விரும்புகிறேன்.

இத்திருப்பணிகளில் பொது மக்களும் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளும் வகையில் அந்தந்த கோவில்களுக்குரிய திருப்பணிக் குழுக்களை அமைத்துக் கொள்கின்ற அதிகாரம், மாவட்டக் குழுக்களுக்கு தற்போது வழங்கப்பட்டுள்ளது. எனவே மாவட்டக் குழு நிர்வாகத்தின் கீழ் வரும் கோவில்களின் திருப்பணிகளை, நீங்கள் விரைந்து மேற்கொள்ள வேண்டுமென உங்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பல திருக்கோவில்களுக்குப் பெரும்பாலான விவசாய நிலங்கள் இருந்தும் அவைகளிலிருந்து நியாயமாக கிடைக்க வேண்டிய வருவாய் கிடைக்காததால், அவைகளில் ஒருகால பூஜைகூட நடைபெறுவதற்கு வசதியில்லாத நிலை இருந்து வருகிறது. எனவே, இப்படி நலிவுற்ற திருக்கோவில்களில் ஒரு கால பூஜையாவது நடத்த, ஒரு நிரந்தர வைப்பு நிதி ஏற்படுத்தி, அதிலிருந்து கிடைக்கும் வட்டியைக் கொண்டு, இப்பூஜையை நடத்தலாமென அரசு முடிவு செய்துள்ளது. இதற்காக, பொது மக்கள் மூலம் அந்தந்த திருக்கோவில்களுக்கு ரூபாய் 25 ஆயிரம் நன்கொடை வசூலித்து, அதன் மூலம் வைப்புநிதி ஒன்றை ஏற்படுத்தி, அவ்வைப்பு நிதிக்கு கிடைக்கின்ற வட்டியைக் கொண்டு, ஒரு கால பூஜை நடத்துகின்ற திட்டத்தையும் அரசு அறிவித்துள்ளது. இப்படி ரூபாய் 25 ஆயிரத்தை முழுவதும் நன்கொடையாக பொது மக்களால் திரட்ட முடியாத நிலையில் அதில் 50 சதவீதத் தொகையான ரூபாய் 12,500-ஐ பொது மக்கள் திரட்டி தந்தால் அத்திருக்கோவில்கள் ஒவ்வொன்றுக்கும் ரூபாய் 12,500-ஐ முதல் அமைச்சர் திருக்கோவில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதியிலிருந்து நிதியுதவியாக வழங்கலாம் எனவும் அரசு முடிவு செய்திருக்கிறது. இந்நிதி உதவியினை இந்த ஆண்டு 400 திருக்கோயில்களுக்கு வழங்கலாமென முடிவு செய்து, அதற்குரிய நடவடிக்கையினை அரசு எடுத்து வருகிறதுஎன்பதையும் இங்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இத்திட்டத்திற்கு உங்கள் அனைவரின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமாகும்.

இது தொடர்பாக மேலும் சில தகவல்களை உங்களுக்கு தருவது அவசியம் எனவும் கருதுகிறேன். திருக்கோவில்களுக்குச் சொந்தமான விவசாய நிலங்கள் மூலம் கிடைக்க வேண்டிய பாக்கியை நிவாரணச் சட்டம் கடந்த 20 ஆண்டுகளாக செயலில் இருந்தால், குத்தகைதாரர்களிடமிருந்து குத்தகையை வசூலிக்க இயலவில்லை. இந்த நிவாரணச் சட்டத்தினை 31-7-1991-ல் இருந்து நீக்கும் துணிகர நடவடிக்கையை, இவ்வரசு எடுத்துள்ளது.

இப்பணிக்காக ஏற்கனவே 5 வருவாய் நீதி மன்றங்கள் செயல்பட்டு வந்தன. தற்போது பணிபளுவின் காரணமாக, கூடுதலாக 6 வருவாய் நீதிமன்றங்களை அமைக்க அரசு தீவிர நடவடிக்கை எடுத்துள்ளது. இந்த ஏற்பாட்டின் மூலம் பாக்கி செலுத்த வேண்டிய குத்தகைதாரர்கள் மீது வழக்கு தொடர்ந்து, அவைகளை வசூலிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை, நான் இங்கு தெரிவித்திட கடமைப்பட்டுள்ளேன்.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள ''கன்னியாகுமரி இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத திருக்கோவில்கள்'' நிர்வாகத்திலுள்ள திருக்கோவில்களுக்கு ஆண்டுதோறும் அரசு மானியமாக ரூ. 13.70 இலட்சம் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது விலைவாசி உயர்வினை கருத்திற்கொண்டு, இவ்வாண்டு கூடுதலாக அரசு மானியம் ரூபாய் 3 இலட்சம் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. அனைத்திற்கும் மேலாக ''முதலமைச்சர் திருக்கோவில் மற்றும் பராமரிப்பு நிதியிலிருந்து'' ரூபாய் ஒரு கோடி தொகையை தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தில் வைப்பு நிதியாக முதலீடு செய்து அதிலிருந்து ஆண்டு தோறும் கிடைக்கும் வட்டியிலிருந்து, ரூபாய் 10 இலட்சத்தை மேற்குறிப்பிட்ட கன்னியாகுமரி தேவஸ்தான நிர்வாகத்திற்கு கொடுக்க இந்த அரசு ஆணையிட்டுள்ளது என்பதை இங்கே நான் எடுத்துச் சொல்ல கடமைப்பட்டுள்ளேன்.

தமிழ்நாட்டில் உள்ள திருக்கோவில்களுக்குச் சொந்தமான நகர்ப்புற நிலங்கள், குறைந்த தொகைக்கு நீண்ட காலத்திற்கு கொடுக்கப்பட்டு, அதனால் திருக்கோவில்களுக்கு மார்க்கெட் நிலவரப்படி கிடைக்க

வேண்டிய வருவாய் கிடைக்கப் பெறாத நிலைமை இருந்து வருகிறது. இந்த அவல நிலையைப் போக்கி, திருக்கோவில்களுக்குச் சொந்தமான நகர்ப்புற நிலங்களுக்கு மார்க்கெட் நிலவரப்படி நியாயமான வருவாய் கிடைக்க உரிய சட்டத் திருத்தநடவடிக்கையை இந்த அரசு மேற்கொண்டு வருகிறது.

இதுபோலவே, திருக்கோவில்களுக்குச் சொந்தமான சில கட்டிடங்களுக்கு, நியாயமான வாடகை கிடைக்காத நிலைமையும் இருந்து வருகிறது. தற்போதுள்ள வாடகைதாரர்கள் இன்றைய நிலவரப்படி உள்ள வாடகையைச் செலுத்த தவறினால், அவர்களை அப்புறப்படுத்த முயற்சிகள் மேற்கொள்வதோடு அத்தகைய கட்டிடங்களை பொது ஏலம் மூலம் வாடகைக்கு விட்டு, உரிய வருவாய் பெறுவதற்கான நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ள வேண்டும்.

இந்த நேரத்தில், அனைவரின் கவனத்தையும் ஈர்க்கின்ற இன்னொரு முக்கிய கருத்தினை உங்களுக்குக் கூறுவது அவசியமெனக் கருதுகிறேன். திருக்கோவில்களுக்குச் சொந்தமான விலை மதிப்புடைய தங்கம், வெள்ளி உலோகத் திருமேனிகள் ஆகியவைகளை உரிய முறையில் பேணி, பாதுகாப்பாக வைக்க வேண்டியது நமது கடமையாகும். திருக்கோவில்களில் உள்ள விலைமதிப்புடைய தங்கம், வெள்ளி மற்றும் உலோகத் திருமேனிகள் போன்றவைகளைப் பாதுகாப்பதற்காக 4,000 காவலர்கள் கொண்ட ஒரு பாதுகாப்புப் படையைஅதாவது 1000 காவலர்கள் மற்றும் 3000 முன்னாள் ராணுவ வீரர்கள் கொண்ட காவல் பிரிவு ஒன்றை ஏற்படுத்த அரசு முடிவு செய்து, இதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதை இங்கு கூற விழைகின்றேன்.

[வரலாற்று சிறப்புமிக்க நூற்றுக்கணக்கான திருக்கோவில்கள் நிறைந்த தமிழ்நாட்டில் அந்த திருக்கோவில்களை பாதுகாக்கவும், அவற்றின் புராதனத்தை பாதுகாக்கவும் திருக்கோவில்கள் மேலும் வளர்ச்சி அடையவும் பணிகளை மேற்கொள்வதற்காக தமிழக அரசால் உருவாக்கப்பட்ட திருக்கோவில் நிர்வாக வாரியத்தின் 2வது கூட்டம் (20-6-92) அன்று சென்னை கோட்டையில் மாண்புமிகு முதல் அமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள்கூட்டி இருந்தார். முதல் அமைச்சர் தலைமையில் இந்த கூட்டம் காலை 11 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை நடந்தது.

அமைச்சரவை அறையில் நடந்த இந்த கூட்டத்தில், இந்த வாரிய உறுப்பினர்களான காஞ்சி தொண்டை மண்டல ஆதீனம், சுந்தரம் நிதி நிறுவன தலைவர் டி.எஸ். சந்தானம், ''தினத்தந்தி'' அதிபர் பா. சிவந்தி ஆதித்தன் அல்லூர் விஸ்வநாத சிவாச்சாரியார், முன்னாள் அட்டர்னி ஜெனரல் கே. பராசரன், நாங்குநேரி வானமாமலை ராமானுஜ ஜீயர் சார்பில் வெங்கடாச்சாரி அக்னி கோத்திரம் ராமானுஜ தாத்தாசாரியார், ராமநாதபுரம் ராணி டி. இந்திராதேவி ஆகியோர் கலந்து கொண்டனர்.

அரசு தரப்பில் போக்குவரத்துத்துறை அமைச்சர், மாண்புமிகு செங்கோட்டையன், ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் மாண்புமிகு ஆனந்தன், தலைமைச் செயலாளர் திருமந்திரச் செம்மல் திருமிகு டி.வி.வெங்கட்டராமன், வருவாய் துறைச் செயலாளர் திருமிகு சீதா ராமதாஸ், இந்து அறநிலையத் துறைச் செயலாளர் திருமிகு தங்கராசு, இந்த வாரியச் செயலாளரான இந்து அறநிலையத் துறை ஆணையாளர் திருமிகு சுந்தரேசன், ஐ.ஏ.எஸ்., தலைமை என்ஜினியர் கட்டிடங்கள் திருமிகு மாடக்கண்ணு, தொல்பொருள் ஆராய்ச்சி துறை இயக்குனர் நடனகாசிநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிர்வாகக் குழுக் கூட்டத்தில் 92 பொருட்கள் மீது விரிவான விவாதம் நடைபெற்று தக்க முடிவுகள் எடுக்கப்பட்டன.]

வாசகர் எண்ணங்கள்

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் திருக்கோயில்களின் சீரான பராமரிப்பிற்கு ஆற்றிவரும் பொற்பணிகள்பாராட்டிற்குரியன. திருக்கோயில் காவல் தெய்வமென வருங்காலம் அவரை வாழ்த்திப் புகழும் என்பது திண்ணம்.

— கவிஞர் முருகமாணிக்கம், சேலம்-1

திருமந்திரச் செம்மல் திருமிகு டி.வி. வெங்கட்ராமன் ஐ.ஏ.எஸ். அவர்களின் ''அருளாளர்கள் அருள் அனுபவம்'' ஆன்மீக ஞானப் பழமாகத் தித்திக்கின்றது. திருவாசகத்தின் அருமையை அயல்நாட்டாரும் எவ்வாறு அறிந்து போற்றினர் என்பதை திருமந்திரச் செம்மல் விவரித்திருந்த பாங்கு நெஞ்சை நெகிழச் செய்து, கண்ணீரைப் பெருகச் செய்தது. திருவாசகம் தினமும் ஒருபாடலாவது படித்து இன்புறுவது என்ற நல்ல முடிவை நானும் என் குடும்பத்தாரும் கொண்டு விட்டோம்.

— புலவர் தங்கவேலனார், ஈரோடு-638006

அருளாளர்களின் அருள் அனுபவம்

திருமந்திரச்செம்மல்
திருமிகு டி.வி.வெங்கட்டராமன் ஐ.ஏ.எஸ். அவர்கள்



'திருமந்திரச் செம்மல்'

திருமிகு டி.வி. வெங்கட்டராமன், ஐ.ஏ.எஸ்.

பல நூற்றாண்டுகளுக்கு முன்பு நடந்தது இது. காடுகளிலும் மலைகளிலும் முனிவர்கள் தாங்கள் கற்ற வேதங்களை தீவிரமாக ஆராய்ந்து, அவற்றைப் பற்றிச் சிந்தித்து அவற்றின் உண்மைப் பொருளைத் தெளிவாகக் கண்டு உணர்ந்து கொள்வதற்காக சீடர்களுடன் சென்று பல ஆண்டுகள் நிட்டையில் அமர்ந்திருந்தனர். தவ யோக நெறியில் நின்றனர். உலகத்தை மறந்தனர், தங்களுடைய பார்வையெல்லாம் தம்முள் செலுத்தினர். அவர்களுடைய உள்ளங்களில் பரம்பொருளைப் பற்றியும், தம்மைப் பற்றியும் உண்மைகள் தோன்றலாயின. அந்த உண்மைகளே நமக்கு உபநிடதங்களாகக் கிடைத்துள்ளன. உபநிடதங்கள் இந்திய நாடு உலகத்திற்கு அளித்த ஆன்மீக பொக்கிஷங்களாகும், என்றும் குறையாத செல்வமுமாகும். அவையே வேதாந்தம் எனப்படும். அவை பரம்பொருளை விளக்குகின்றன. சீடனைப் படிப்படியாக ஆன்மீக அறிவின் சிகரத்திற்கு அழைத்துச் செல்கின்றன.

உபநிடதங்களில் சாந்தோக்கியம் முக்கியமானது. அது சாம வேதத்தைச் சேர்ந்தது. சாந்தோக்கியத்தில் நாம் தெரிந்து கொள்ள வேண்டிய மிக முக்கியமான நிகழ்ச்சி ஒன்று பின்வருமாறு:

சுவேதகேது என்ற பெயருடைய ஓர் இளைஞன் வேதங்களைப் படித்து சிறந்த அறிவு பெறுகிறான். எனினும் தான் பெற்ற அறிவு முழுமையானதல்ல என்று அவன் உணர்ந்து கொள்ளவில்லை. தன்னுடைய அறிவைப் பற்றி அவன்கர்வப்பட்டுக் கொண்டு இருக்கும்போது அவனுடைய தந்தை, அருணி என்பவர் அவனை அழைத்து, ''எல்லாவற்றையும் படித்து விட்டதாகச் சொல்லிக் கொள்கின்றாயே, எல்லாவற்றிற்கும் மேலான பரம்பொருளின் தன்மையைப் பற்றி என்னதெரிந்து கொண்டிருக்கின்றாய்'' என்று கேட்கிறார். தனது அறிவின்மையை நன்கு உணர்ந்த சுவேதகேது தந்தையாரிடம், பரம்பொருளைப் பற்றி தனக்கு விளக்க வேண்டும் என்று அடக்கத்துடன் கேட்டுக் கொள்கின்றான். பல உதாரணங்களைக் கொடுத்து, படிப்படியாக தனது மகனை அருணியானவர் முற்றிலும் உணர வைக்கின்றார். அவனுடைய ஆன்மீக இருளைப் போக்குகின்றார். உள்ளொளியைப் பெருக்குகின்றார்.

மண் ஒன்று. அதை வைத்து குயவன் பல மண்பாண்டங்களைச் செய்கின்றான். பாண்டங்கள் பெயரிலும்உருவத்திலும் வெவ்வேறாக இருக்கலாம். அவற்றிற்கு அடிப்படை மண்தான். தங்கம் ஒன்று, தங்கத்திலிருந்து தட்டான் பல ஆபரணங்களைச் செய்கின்றான். அவற்றிற்கு மூலம் தங்கம்தானே. சூரியனைக் காண்கின்றோம். சூரியனுடைய கிரணங்களில் பல நிறங்கள் கலந்து நிற்கின்றன. ஆனால், அவையெல்லாம் சூரியனிடமிருந்தே எழுந்தவை. பால் தயிராகிறது. தயிர் வெண்ணெய் ஆகிறது. வெண்ணெய் நெய் ஆகிறது. எல்லாவற்றிற்கும் பால்தான் அடிப்படையாக இருக்கிறது. அதேபோல எல்லா உலகிற்கும், உயிருக்கும் அடிப்படையாக இருப்பது பரம்பொருளே. நாம் பார்ப்பது, அனுபவிப்பது போன்றவைக்கு பரம்பொருளே ஆதாரமாகும். அதுவே மூலப்பொருள். தேனீக்கள் பல பூக்களிலிருந்து தேனைச் சேகரிக்கின்றன. ஆனால் தேன் ஒன்றே. உயிருள்ளவை. உயிரற்றவை எல்லாமுமே பரம்பொருளில் சேருகின்றன. உலகெங்கிலும் பல நதிகள் கிழக்கிலும், வடக்கிலும், மேற்கிலும், தெற்கிலும் பாய்ந்து கடலை அடைந்து அங்கே தங்குகின்றன. கடலை அடைந்தவுடன் நதிகளுக்கெனத்தனிப் பெயர் கிடையாது. உருவம் கிடையாது.

மனிதன் விழித்திருக்கும் பொழுதும் உறங்கும் பொழுதும், கனவு காணும்பொழுதும், அவனுடைய உயிரானது தொடர்ந்து இயங்குகின்றது. ஒரு சிறிய ஆல மர வித்து நாளடைவில் பெரிய மரமாக வளருகிறது. வித்திலும் மரத்திலும் இருக்கின்ற மூலப்பொருள் ஒன்றே. ஒரு பாண்டத்தில் தண்ணீரை வைத்து அந்தத் தண்ணீரில் சிறிது உப்பைக் கலக்கும்பொழுது தண்ணீர் முழுவதும் உப்பாகின்றது. அதே போல பரம்பொருள் எல்லாவற்றிற்கும் அடிப்படையாக, மூலமாக, சாரமாக நிற்கின்றது. இதுவே உண்மை. ''அதுவே ஆத்மா, அதுவே நீ ஆகிறாய்'' என்று அருணி சுவேதகேதுவிற்கு விளக்குகின்றார்,

அதுவே தத்துவமசி மகாவாக்கியமாகும். இதே கருத்தைக் கொண்ட ''பிரஞ்ஞானம் பிரம்ம'' என்னும் மகாவாக்கியம் இருக்கு வேதத்தில் வருகிறது. ''பிரம்மைவாஹம் அஸ்மி'' என்பது யசுர்வேத மகாவாக்கியம். ''அயமாத்மா பிரஹம'' என்பது அதர்வ வேத மகாவாக்கியம். மிகப்பெரிய உண்மையை இந்த மகாவாக்கியங்கள் வெகு சுருக்கமாகச் சொல்லி முடிக்கின்றன. அதை விளக்க சங்கரர் இராமானுஜர், மத்துவர் ஆகிய மகான்கள் முன் வந்தனர். அத்வைதம், துவைதம், விஸிஷ்டாத் துவைதம் ஆகிய தத்துவங்கள் தோன்றி மக்களிடையே பரவின. பரம்பொருள், உயிர் (ஆத்மா) இவற்றிற்கான தொடர்பு போன்றவைகளுக்கு இந்தத் தத்துவங்கள் விளக்கங்களாக அமைந்துள்ளன. மகாவாக்கியங்கள் கடலைப் போன்றவை. ஆழ்ந்த கருத்துக்களை கொண்டவை. ஆன்மீகப் பாதையில் முன்னேற விரும்பும் ஒவ்வொருவரும் அனுபூதிமானாகிய குருவிடமிருந்து இந்தக் கருத்துக்களைத் தெரிந்து கொள்ள வேண்டும். அவற்றைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். அவற்றிலுள்ள உண்மையை அனுபவிக்க வேண்டும். பின்னர் தெளிவடைய வேண்டும். பரம்பொருளை உணர்ந்து கொள்வது அவ்வளவு எளிதல்ல. அறிவு முதிர்ந்த நிலையில் இறைவனுடைய அருளால் இது நடந்தேற வேண்டும். இதுவும் அவரவருடைய அனுபவத்தால்தான் நிகழும். ''தானே தனித்து எம்பிரான் தன்னை சந்தித்தே'' என்பார் திருமூலர். ஆகவேதான் குருவானவர் சீடனை நோக்கி பல விளக்கங்களைக் கொடுத்து, ''அது நீ ஆகிறாய்'' என்கிறார். இந்த வாக்கியத்தில் பொதிந்து கிடக்கும் உண்மையை உணர்ந்து கொண்ட சீடனும் ''நானே பரம்பொருள் ஆகிறேன்'' என்று அறிந்து கொள்கின்றான்.

இங்கே நாம் கவனிக்க வேண்டிய சொற்கள் **அது, பரம்பொருள், நீ, நான், ஆகும்.** அது என்னும் சொல் பரம்பொருளைக் குறிக்கும். நீ, நான் என்னும் சொற்கள் சீவனை, அதாவது உயிரைக் குறிக்கும். பரம்பொருளை தவிர வேறொன்றும் இல்லை; உயிர், உலகம் போன்றவையெல்லாம் கற்பனையே என்று உள்ளத்தில் உணர்ந்து கொள்வது ஒரு நிலையாகும். அந்த நிலையில் பரம்பொருள்ஒன்றே. அதுவே எல்லாவற்றிலும் வியாபித்திருக்கின்றது. அதுவே மெய், மற்றவையெல்லாம்பொய். நான், நீ என்று சொல்லிக் கொள்வதெல்லாம் பொய் என்கின்ற அறிவு தோன்றுகின்றது. இந்த அறிவு அத்வைத அறிவு எனப்படும். இறைவனை நினைத்து, நினைத்து, உருகி, உருகி சித்தம் சிவமாகிய நிலையில் மாணிக்க வாசகப் பெருமான், ''நீயலாற் பிறிது மற்றின்மை'' ''ஒன்று நீயல்லை அன்றி ஒன்று இல்லை'' என்றும் தனது உள்ளக்கிடக்கையை வெளியிடுகின்றார். ''நானும் பொய், என் நெஞ்சம் பொய், என் அன்பும்பொய்'' என்கின்ற மாணிக்கவாசகரின் திருவாக்கும் இதே உணர்வைத்தான் பிரதிபலிக்கின்றதோ!

தவத்தாலும், யோகத்தாலும், ஆன்மீகத்தின் நிறைவினாலும் உயர்ந்த மனமுடைய சீவன் எல்லாம் அவனே என்கின்ற நினைவுடன் சமுதாயத்தில் வாழ்ந்து வருவது வியப்பு ஒன்றுமில்லை. அத்தகைய சீவன் மகாவாக்கியங்களின் தெளிவைப் பெற்ற சீவன் என்றே எடுத்துக் கொள்ள வேண்டும். அதே நேரத்தில் அந்த சீவன் வாழ்க்கையை வெறுத்து, புறக்கணிக்க வேண்டும் என்பதில்லை. இந்த வாழ்க்கை மாயை என்பதை உள்ளத்தில் ஏற்று இறைவன் அருளால் அந்த வாழ்க்கையை, தாமரை இலைத் தண்ணீர் போல, நடாத்தி வருவதையும் நாம் பார்க்கின்றோம். ''மாய வாழ்க்கையை மெய்யென்றெண்ணி மதித்திடா வகை நல்கினான்'' என்று மாணிக்க வாசகப் பெருமான் பாடுகின்றார்.

திருமூலர் ஓர் சிறந்த ஞானியும் யோகியுமாவார். பரம்பொருளைத் தம்முள் உணர்ந்தவர். இறைவனுடைய பேரறிவு, பேராற்றல், பெரும் கருணை ஆகியவற்றை நன்கு அறிந்து கொண்டவர். உயிர்களுடைய தன்மையைப் பற்றியும், உயிர்களைக் கட்டுப்படுத்தும் பாசத்தைப் பற்றியும் தனது யோக வலிமையால் அறிந்து, தெளிந்து கொண்டவர். அவர் அருளிச் செய்துள்ள திருமந்திரம் ஆன்மீகத்தைப் பற்றிய எல்லாப் பொருள்களையும் எடுத்துக் கூறுகின்றது. மகாவாக்கியங்கள் பற்றியும் பல இடங்களில் கூறுகின்றது. திருமூலர் ஞானத்துள் ஞானத்தை நமக்குப் பிழிந்து கொடுக்கும் ஒப்பற்ற ஞானாசிரியராக இருப்பதால், அவருடைய விளக்கம் மிகச் சிறப்புடையதாகும். அதையும் நாம் தெரிந்து கொள்ள முற்படுவோம்.

பரம்பொருள் ஒன்றே. அது அநாதியானது. மலமில்லாதது. என்றும், எங்கும் உள்ளது. யாவற்றையும் தன்னுள் அடக்கியுள்ளது. குணமும் குறியும் இல்லாதது. நித்தியப் பொருள். பேரறிவும், பேராற்றலும் பெற்றது. ஆனந்தமயமானது. .உயிர்களை உய்விக்க சதா தனது அருள் மழையைப் பொழிந்து கொண்டிருப்பது. அதற்காக ஐந்தொழில்களை இயக்கிக் கொண்டே இருப்பது.

இறைவனைப் போல உயிரும் அநாதி. உயிரை பந்திக்கும் பாசமும் அநாதி. உயிர் சிற்றறிவும், சிறு ஆற்றலும் பெற்றது. உயிரினுடைய அறிவு தான் சார்ந்ததன் பொருளையே பெறும். உடலில் புகுந்து புலன்களையும், கருவிகளையும் பெற்று நிற்கும்பொழுது அவற்றால் கிடைக்கக்கூடிய அறிவையே முழுமையாக பாவிக்கும். அவற்றிடமிருந்து சுதந்திரம் பெற்று இறைவனைச் சாரும்பொழுது இறையறிவு பெற்று சிவமாம் தன்மையில் நிற்கின்றது. முதலில் சுட்டறிவு, பிறகு சிற்றறிவு,

பின்னா முற்றறிவு ஆகியவை உயிரினுடைய அறிவின் வளர்ச்சியைக் குறிக்கும்.

உயிருடன் அநாதியாக சேர்ந்துள்ளது ஆணவமலமாகும். மாயையும், கன்மமும் வந்து பொருந்தியவை. உயிர் மேலும் மேலும் பிறப்புகள் எடுக்க இவை வழி செய்கின்றன. இவற்றின் வலிமையால் உயிரானது புலன் களையும், கருவிகளையும் பயன்டுத்தி அவை வழி சென்று, உலக விஷயங்களில் பொருந்தித் தோய்கிறது. தன்னை இந்திரியங்கள் போன்ற கருவிகள் மயமாகவே கருதிக் கொள்கின்றது. ''மாயக் குழியில் விழுவர் மனை மக்கள்; பாசத் தில் உற்று பதைக்கின்றவாறே'' என்கிறார் திருமூலர். மும்மலங்களைக் கொண்ட பாசம் சீவனை சிவத்திடமிருந்து பிரித்து வைக்கின் றது.

ஆனால், இறைவனுடைய நியதிப்படி எல்லா உயிர்களும் இறைவனுடைய அருளை காலப் போக்கில் பெற்றே தீரும். உயிர்களு டைய நலம் கருதி இறைவன் தன் பேரருள் தன்மையால் மிகவும் இழிந்த நிலையில் உள்ள உயிர்களாகிய நம்மை, நமது பக்குவத்திற் கேற்ப ஆட்கொள்கின்றான். உயிருக்கு அருள் விளக்கம் கிடைக்கின்றது. உயிருக்குள்ள ஒரு முக்கியத் தன்மை மலப்பற்றில் இருப்பது அல்லது சிவனுடைய அருளைப் பற்றி நிற்ப தாகும். மலமாகிய பற்றை விட்டு சிவப்பற்றைப் பெறுவது இறைவனுடைய அருளால்தான். ஊஞ்சல் சங்கிலியைப் பற்றி விட்டத்திலிருந்து தொங்கி ஆடிக்கொண்டிருக்கின்றது. சங்கிலி அறுந்தால் ஊஞ்சல் தரையில் விழுந்து, தரை யைப் பற்றி நிற்கின்றது. ஊஞ்சலின் ஆட்ட மும் ஓய்ந்து விடுகின்றது. அதே போல்தான் உயிரினுடைய இயக்கமும். அறிவு விளக்கம் பெற்ற நிலையில் உயிருக்கு பிறப்பு நீங்க வேண் டும் என்கின்ற எண்ணம் தோன்றும். இதன் காரணமாக உயிரானது சரியை, கிரியை, யோகம் போன்ற நெறிகளை மேற்கொள்ள விழையும். இந்த நெறிகள் ஞானத்திற்கான வழியைக் காட்டுகின்றன. அப்பொழுது இறை வன் குரு வடிவாக வந்து நமக்கு அருள் செய் கின்றான். அந்த அருளால் சூரியனுடைய ஒளியால் சூரியகாந்தக் கல்லைப் பாய்ச்சிய பஞ்சில் தீ பிடிப்பதுபோல உயிருக்கு ஞான விளக்கம் ஏற்படுகின்றது. அப்பொழுது உயிர், தான் சார்ந்துள்ள உடல், கருவிகள் ஆகிய வற்றைத் தனக்கு வேறுபட்டதாக உணர்ந்து கொள்கின்றது. தன்னுடைய அறிவு, இறைவ னுடைய அறிவு என்கின்ற எண்ணமும் தனது செயல் அவனுடைய செயல் எனவும் உணர்வு தோன்றும். உடலுக்கு அடிமையாகிய தன்மை நீங்கி சிவத்திற்கு அடிமை என்கின்ற நினைப் பும் வரும். இந்த நிலையைத் திருமூலர்,

''செப்ப அரிய சிவங்கண்டு தான்தெளிந்து
அப்பரிசாக அமர்ந்திருந் தாரே''

என்று விளக்குகிறார். (திருமந்திரம்.....126)

சிவமாம் தன்மையைப் பெற்ற பெருமைக் குரிய உயிர்கள் எல்லாம் சிவன் செயல் என் கின்ற உணர்வில் நிற்பர்.

''இருந்தார் சிவமாகி எங்குந் தாமாகி
இருந்தார் சிவன்செயல் யாவையும் நோக்கி''

(திருமந்திரம்...127)

நமக்கு நேரும் நன்மையும், தீமையும், இன்பமும், துன்பமும் அவனால் ஆவது. அவன் செயலுக்கு நாம் நம்மை அர்ப்பணித்துவிட் டோம். அவனுடைய திருவருள் ஒன்றுதான் நமக்குத் தெரியும். இதைத் தவிர நாம் நாமாகச் செய்வது வேறொன்றில்லை என்கிற உணர்வு உள்ளத்திலே தோன்றும். அந்த உணர்வை மாணிக்கவாசகப் பெருமான்

''நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
நானோ இதற்கு நாயகமே''

என்று புலப்படுத்துகின்றார்.

இந்த உணர்வுகளை திருமூலர் இரண்டு திருமந்திரங்களில் வெளிப்படுத்துகின்றார். அவை பின்வருமாறு:

''சிந்தையது என்னச் சிவன் என்ன வேறில்லை
சிந்தையி னுள்ளே சிவனும் வெளிப்படும்
சிந்தை தெளியத் தெளியவல் லார்கட்குச்
சிந்தையி னுள்ளே சிவனிருந் தானே''

(திருமந்திரம்..2853)

''சீவன் என்னச்சிவ னென்னவே றில்லை
சீவ னார்சிவ னாரை அறிகிலர்
சீவ னார்சிவ னாரை அறிந்தபின்
சீவ னார்சிவ னாயிட் டிருப்பரே''

(திருமந்திரம்...2017)

முன்சொன்ன மகாவாக்கியங்களில் உட் பொருள் இந்த இரண்டு மந்திரங்களில் அடங்கி யிருக்கின்றது. மகாவாக்கியத்தில் உள்ள த்வம் (நீ) என்கிற சொல் உயிரைக் குறிக்கும். உயி ரானது இப்பொழுது உடம்பினில் வாழ்ந்து கொண்டிருக்கின்றது. நாம் உடம்போடு உள்ள நிலை சகல நிலை என்று கூறப்படும். இந்த சகல நிலையில் உயிரானது உடம்புடனும், இந்திரியங்களுடனும், அந்தக்கரணங்களுடனும் கூடியுள்ளது. சகல நிலையில்தான் கன்மம், மாயை இரண்டும் சேர்ந்து உயிரை இயக்கி வைக்கின்றன. இந்த நிலையில்தான்உயிரானது வினைகளைச் சேர்க்கின்றது. சுட்டறிவின் அடிப்படையில் உயிர் உடலையும் அதன் கருவி களையும் சார்ந்தவண்ணம் அவற்றின் இன்ப துன்பங்களுக்கு ஆளாகிறது.

இத்தகைய கருவிகளுடன் சேராமல் உயி ரானது முடங்கிக் கிடக்கும் நிலை கேவல நிலை யாகும். இந்த நிலையில் உயிருடன் ஆணவ மலம் மட்டுமே அநாதியாக சேர்ந்துள்ளது. இதைக் கேவல நிலைஎன்றுகுறிப்பிடுவர். இந்த நிலையில் உயிரானது இச்சை, ஞானம், கிரியை போன்ற இயக்கங்களுக்கு ஆளாகாது தனியாக நிற்கும். ஆணவம் ஒன்றே சேர்ந்துள்ள இந்த நிலையை இருள் நிலை என்றும் அழைப்பர்.

அறியாமை வயப்பட்டு நிற்கும் உயிர் இறைவன் அருளால் சகல நிலையைப் பெறு கிறது. உயிரானது அறிவு விளக்கம் பெறுவதற் காக இந்த நிலை கடவுளால் ஏற்படுத்தப்பட் டது. இருள் சூழ்ந்த அறையில் நிற்கும் ஒருவ னுக்கு கையில் ஒரு சிறிய விளக்கு கிடைத்தால் அது அந்த இருளை முழுமையாக நீக்காவிட் டாலும் சிறிது வெளிச்சம் பட உதவி புரிவது போல் இந்த சகல நிலை உள்ளது.

சகல நிலையிலுள்ள உயிருக்கு அதன் பக்குவ நிலைக்கேற்ப, கர்மங்களின் வலிவு குறைய இறைவனுடைய அருட்சக்தி உயிரின்

மீது பதியத் தொடங்கும். உயிர் குருஅருள் பெறும். உலக விஷயங்களின் போக்கும்வரத்தும் உயிரிடமிருந்து பிரியத் தொடங்கும். இறைவனுடைய அருள் உயிரின் வேகத்தைக் கெடுத்து கருவிகளுடைய வலுவைக் குறைத்து சிவஞானத்தைப் பெருக்கி உயிரை சுத்தப்படுத்தும். இதுவே உயிரினுடைய சுத்த நிலையுமாகும். இதுவே உயிரின் அருள் நிலையுமாகும். இந்த நிலையில் உயிர் முப்பத்தாறு தத்துவங்களை நீக்கியுள்ளது என்று பெரியோர் கூறுவர். இந்த நிலையை சீவதுரியம் என்றும் குறிப்பிடுவார்கள். மனிதனுக்கு நனவு, கனவு மற்றும் உறக்கம் என்கின்ற மூன்று நிலைகள் உண்டு என்பதை நாம் அறிவோம். அவற்றிற்கு அப்பாற்பட்ட ஒரு நிலையை துரியம் என்று பெரியோர் வைத்துள்ளனர். இந்த நிலையில் நான் என்கின்ற மனோபாவம் காய்ந்து, தேய்ந்து உடலுடைய தொடர்பை விட்டுவிடுகின்றது. இதை திருமூலனார் ''சீவதுரியத்துத் தொம்பதம்'' என்கிறார்.

உயிரினது ஆன்மீக முன்னேற்றம் இத்துடன் நிற்கவில்லை. விளக்கின்சுடரைத் தூண்டினால் வெளிச்சம் அதிகப்படும். இறைவனுடைய அருளால் ஆன்மாவின் தன்மை இருட்டிலிருந்து வெளிச்சத்திற்கு வரும். உடலைச் சேர்ந்த கருவிகள், கரணங்கள் தங்கள் இயக்கத்தில் இறைவனுக்கே உரிமைப் பட்டுவிடுகின்றன. உயிர் அவற்றைத் தொடர்ந்து பயன்படுத்தும். ஆனால், திருமூலர் கூறுவது போல ''தானே புலனைந்தும் தன்வசம் ஆயிடும்; தானே புலனைந்தும் தன் வசம் போயிடும்; தானே புலனைந்தும் தன்னில் மடைமாறும்'' (திருமந்திரம்.....140) சீவ கரணங்கள் சிவகரணங்களாக மாறிய நிலை பரதுரியம் எனப்படும். இந்த நிலையைத் திருமூலர் தற்பதம் என்று குறிப்பிடுகின்றார்.

அடுத்து சீவனார் சிவனாராக இட்டிருக்கும் உணர்வு. இது ஆன்மீகத்தின் மேலானபடி. உயிர் இந்தப் படியை அடையும்பொழுது அவிபதம் இயக்கத்திற்கு வருகிறது. அப்பொழுது இறைவன் சீவ, சிவ பேதமில்லாமல் கலந்து நிற்பான். இறைவன் திருவருளால் மல வாசனைகள் நீங்கி உயிர் உயர் நிலையை அடையும். அறியாமை, அறிவு என்கின்ற படிகளைக் கடந்து, அருள் பெற்று சிவத்தை உணர்வற உணர்வதற்குப் பொருந்திய நிலை இது. சீவன் அப்போது சிவமாய் ஒன்றி நிற்கும். இந்த உணர்வே தத்துவமசி மகாவாக்கியத்தின் இயல்பாகும் என்பது திருமூலரின் அருள் வாக்காகும்.

''சீவ துரியத்துத் தொம்பதம் சிவனார்
தாவு பரதுரி யத்தனில் தற்பதம்
மேவு சிவதுரி யத்தசி மெய்ப்பத
மோனி விடுந்தத் துவமசி உண்மையே''

(திருமந்திரம்....2568)

உயிர் தத்துவங்களுடனும், புறக்கருவிகள் உட்கருவிகள் ஆகியவற்றுடன் சேர்ந்து நிற்கும் பொழுதும் உயிரின் நிலைமை அறியாமை யாகும். அப்பொழுது தொம்பதத்தின் எல்லை தொடங்குகின்றது. உயிரின் உள்நின்று அவற்றை ஆட்டுவிப்பவன் இறைவனே. இறைவன் எங்கும் பரவி இருக்கின்றான். அதை உணர்ந்த உயிர் தொம்பத எல்லையை விட்டு தத்பத எல்லைக்கு வருகிறது. பின்னர் இறையருளால் தன்னை இறைவனுக்கு ஒப்படைக்கின்றது. இதை ஒன்று நெறி அனுபவம் எனலாம். இறைவனும் திரு அருளும் ஒன்று தான். அவை வேறு அல்ல. உயிரின் சிந்தையில் திருவருள் நிறைந்து நிற்கும்பொழுது அந்த உயிரின் செயல்கள் சிவசெயல்களாகின்றன. இதனை மணிவாசகப் பெருமான் ''சித்தம் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கும்'' என்று குறிப்பிடுகின்றார். இதுவே தித்திக்கும் சிவபதமாகும். இந்த இன்பம் உள்ளத்திலே பதிந்த இறைக் கலப்பு அளித்த இன்பமாகும். மணிவாசகர் இதனை ''ஊனாய், உயிராய், உணர்வாய் என் உட்கலந்து'' என்று கூறுகின்றார். எங்கும் நிறைந்துள்ள பரம்பொருள் இந்த உயிரினும் உயிரோடு உயிராகக் கலந்து நிற்கின்ற ஒரு பெருமையை உயிர் அனுபவிக்கின்றது. ''தன்னையே எனக்குத் தந்தருள் ஒளியால் என்னை வேதித்த என்தனி அன்பே'' என்று வள்ளலார் உள்ளம் உருக கதறுகின்றார்.

''மெய்வாய்கண் மூக்குச் செவியென்னும்
மெய்த்தோற்றத்
தவ்வாய அந்தக் கரணம் அகிலமும்
எவ்வா யுயிரும் இறையாட்ட ஆடலாற்
கைவாயி லாநிறை எங்குமெய் கண்டதே''

(திருமந்திரம்....2586)

மகாவாக்கியத்தின் உட்பொருளைமேலும் மேலும் சற்று நெருங்கிப் புரிந்து கொள்ள முயலலாம். ''நீ அதுவாகின்றாய்'' என்றால் பரம்பொருள் ஒன்றே, உயிர் என்பது இல்லை. எல்லாமே கற்பனை என்கின்ற உணர்வு பிறந்து, பரம்பொருளைத் தவிர வேறொன்று மில்லை என்று பாவித்துக் கொள்ளுதல் மகா வாக்கியத்திற்கு ஒருவித அர்த்தத்தைக் கொடுப்பதாகும். அதே நேரத்தில் உயிர் என்று ஒன்று இருந்தால்தான் அந்தப் பாவனை செய்ய முடியுமல்லவா! ஆனால், அந்த உயிர் உடலைப் பற்றிய அறிவில் மூழ்கியிருக்கும் போது, உடலையும், இறைவனைப் பற்றிய அறிவில் மூழ்கியிருக்கும்போது இறைவனையும் சாரும் என்கிற உண்மையை நாம் கண் கூடாக அனுபவிக்கின்றோமே! உயிருக்கு உடலைப் பற்றும் வரை தன்னைப் பற்றிய அறிவு தோன்றாது என்பதையும், உடல் மீது உள்ள பற்றை அறுத்தால் உள்ளத்திலே இறை அனுபவம் தோன்றும் என்பதையும் நாம் அறிகின்றோம். இந்த அறிவே தத்துவமசி மகா வாக்கியத்தின் உட்பொருளுக்கு அடிப்படையாகும். உலகம் தான் அல்ல என்கின்ற அறிவைப் பெற்று உயிர் உலகத்தை ஒதுக்கியதுமே இறைவன் திருவடியே தஞ்சமென்று அதனை அணையும், ''அந்நியம் இன்மையின் அரன்கழல் செலுமே'' என்று சிவஞானபோதம் கூறுகிறது.

-தொடரும்

நிறைமதி

நூல் பெயர் : **அருளொளி திருமுருகன் அந்தாதி**

நூலாசிரியர் : செந்தமிழ்ப் புலவர் மணி வீ.கே. சுப்பிரமணியம்

வெளியீடு: செந்தமிழ்க் கலா நிலையம் (இந்தியக்கிளை)

மனை எண். 704, கொழுந்துறை இல்லம் அண்ணாநகர் மேதகு விரிவாக்கம், சென்னை—600101.

பக்கம் : 102 விலை ரூ. 20.

மலேய நாட்டின் தலைசிறந்த கவிஞர் பெருமக்களுள் ஒருவராக விளங்கும் செந்தமிழ் புலவர்மணி டாக்டர் வீ.கே. சுப்பிரமணியம் அவர்கள் ஏற்கனவே பல ஆன்மீகக் கவிதை நூல் களைப் பாங்குறப் படைத்தளித்துள்ளார்கள். பினாங்கு கொடிமலை அருளொளி திருமுருகன் மீது இவர் பாடியுள்ள இவ்வந்தாதி கவிதைகள் ஆசிரியரின் பதினோராவது நூலாகும். முருகன் திருவருளால் ஒரே இரவில் நூலாசிரியர் இக் கவிதை நூலைப் பாடியிருப்பது குறிப்பிடத் தக்கது.

''பரம்பொருள் போற்றும் பரம்பொருளே
பக்தர்க் கிரங்கும் கருப்பொருளே
அரும்பொருள் இன்பம் வீடென்னும்
அறக்கதி பெறவே விழைகின்றேன்
வரும்பகை யறியேன் பிழையறியேன்
வருநோய்த் துன்ப நிலையறியேன்
குருவே குகனே கொடிமலைவாழ்
கோவே கந்தப் பெருமானே''.

பக்திச் சுவை மணக்கப் பாடியிருக்கிறார் மலேசியப் பாவலர் டாக்டர் வீ.கே. சுப்பிர மணியம். முருகபக்தர்களுக்குப் பஞ்சாமிர்த மாய் இனிக்கும் இந்நூல்.

2, நூல்பெயர் : **திருத்தலங்கள் வரலாறு**
பதிப்பாசிரியர் : வித்துவான் சு.பாலசாரநாதன்
வெளியீடு: டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம், பெசண்ட் நகர், சென்னை-600090.

பக்கம்: 664. விலை :ரூ.60.

தேவார மூவர் பாடல்பெற்ற 275 சிவா லயங்களின் விரிவான வரலாற்றைத் திருமுறை பாடல்களோடு விளக்கிக் கூறும் ஒப்பற்ற நூல் இத் ''திருத்தலங்கள் வரலாறு'' நூல்.

மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் அவர்களின் அரிய உழைப்பால் உருவாகியுள்ள இவ்வருமையான நூலை மிகச் சிறந்த முறையில் பதிப்பித்துள்ளார் வித்து வான் சு. பாலசாரநாதன். அவருக்கு உதவி புரிந்துள்ளார் எஸ். சாயிராமன்.

தேவாரத்தில் வரும் சுவாமி, அம்பிகை யின் திருநாமங்கள், தலவிருட்சங்கள், 64 மூர்த்தித் திருத்தலங்கள், நதிகள், தீர்த்தங்கள் முதலான பல சிறப்புச் செய்திகள் இணைப்பு களாகத் தரப்பட்டிருப்பது இந்நூலின் சிறப் பிற்குச் சிறப்பு சேர்க்கிறது.

o o o

2. நூலின் பெயர் : **பிற்காலப் புலவர்கள்**
பதிப்பாசிரியர் : வித்துவான் எச். வைத்தியநாதன்
வெளியீடு: டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம், பெசன்ட் நகர், சென்னை-90.

பக்கம்: 496. விலை:ரூ.35

''ஐயரவர்கள் ஏடுகள் தேடத் தாம்போன இடங்களில் அங்குள்ள புலவர்களைப் பற்றித் தெரிந்து கொண்டு உடனுக்குடன் குறித்து வைத்துள்ளவை கணக்கில் அடங்கா, அங் கங்கே இருந்த முதியவர், புலவர், ஆசிரியர் போன்றவர்களிடம் அங்கு யாரேனும் புல வர்கள் இருந்திருக்கிறார்களா என்று தூண்டித் தூண்டிக் கேட்டு அவர்கள் கூறியவற்றை அப்படி அப்படியே குறித்து வைத்துள்ள செய்திகளே இந்நூலாக வடிவெடுத்துள்ளன'' என்று பதிப்பாசிரியர் தந்துள்ள குறிப்புரை யால் தமிழ் செய்த தவமாகத் தோன்றிய தமிழ்த்தாத்தா டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் அவர்களின் அரிய உழைப்பால் உருவான தமிழ்க் கருவூலம் இந்நூல் என்பது தெளிய லாம். தெய்வச்சேக்கிழார், கவிச்சக்கரவர்த்தி கம்பர், ஒட்டக்கூத்தர், திரிசிரபுரம் மகாவித்து வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, வித்துவான் தியாகராஜ செட்டியார் முதலான 600 தமிழ்ப் புலவர்களின் வரலாறும், தமிழ்த் தொண்டும் இந்நூலில் விவரிக்கப்பட்டுள்ளன. தமிழ்த் தாயின் தவப்புதல்வரான டாக்டர் உ.வே.சா. அவர்களின் வரலாறும் இந்நூலின் சிறப்புக்குச் சிறப்பு சேர்க்கும் வகையில் இணைக்கப்பட் டிருப்பது குறிப்பிடத்தக்கது.

பரசுராமர்

'பிரசங்க பரிமளம்' ஜெயஸ்ரீ மூகாம்பிகா

பூமியைக் காக்க வேண்டி வராக அவதாரம் செய்த பகவான், பூபாரம் தீர்க்க வேண்டிச் செய்த திருவவதாரமே ஸ்ரீபரசுராம அவதாரம்.

குசிகர் என்ற மன்னர் பெருந்தவம் செய்து இந்திரனை தன் மகனாகப் பெற்றார். அம்மகன் பெயர் காதி. அந்தக் காதிக்கு சத்தியவதி என்ற பெண் பிறந்தாள். அவளை பிருகு முனிவரின மகனாகிய ரிசீகமுனிவர் மணம் புரிய விரும்பினார். ஆனால் காதி ரிசீகரைத் தன் மாப்பிள்ளையாக ஏற்க விரும்ப வில்லை.; மறுக்கவும் மனந் துணியவில்லை. ஆகவே உடல் வெளுப்பாகவும் ஒரு காது மாத்திரப் கறுப்பாகவும் உள்ள ஆயிரம் குதிரைகளைக் கன்யாசுல்கமாகக் கொடுத்தால் தன் மகளை மணம் புரிவிப்பதாக கூறினார். ரிசீகர் தன் முயற்சியால் அத்தகைய குதிரைகளைப் பெற்று காதியிடம் கொண்டு வந்து கொடுத்து. சத்தியவதியை மணந்து அழைத்துச் சென்றார்.

மகளின் திருமணம் முடிந்த பின் காதி, தனக்குப் பின் தன் அரசை ஆள தனக்கொரு ஆண் வாரிசு இல்லாத குறையை முழுவதும் உணர்ந்தார். தனக்கு வாய்த்த மாப்பிள்ளையும் அதற்கு தக்கவராக இல்லாததால் அவர் வருத்தம் மிகுதியானது.

ரிசீகர் காதிக்கும், தமக்கும் புத்திரனுண்டாவதற்காக ஒரு ஹோமம் செய்தார். தம் மனைவியை அழைத்து இரண்டு தனித்தனிப் பிரசாதங்களைக் கொடுத்தார். 'இதை நீ சாப்பிடு, அந்தப் பிரசாதத்தை உன் தாயிடம் கொடு. இருவரும் சிறந்த மக்களைப் பெறுவீர்கள்' என்று கூறி வனத்திற்குச் சென்றார்.

அத்தருணம் மன்னர் காதியும் அவர் மனைவியும் அங்கு வந்தனர். சத்தியவதி அவர்களிடம் விஷயத்தைக் கூறினாள். சத்தியவதியின் தாயின் மனத்தில் விகற்பம் குடிபுகுந்தது. யாருப் தனக்குப் பிறக்கும் மகனே சிறந்தவனாக இருக்க விரும்புவார்கள். ரிசீகரும் அப்படி எண்ணியே மந்திரம் ஜபித்திருப்பார். பிரசாதத்தை மாற்றிச் சாப்பிடுவோம் என்று தீர்மானித்துமகளையும் சம்மதிக்கச் செய்தாள்.

வனத்திலிருந்து திரும்பி வந்த ரிசீக முனிவர் கருவுற்று அழகுடன் பொலிந்து நிற்கும் தம் மனைவியைக் கண்டவுடன் தாம் அளித்த பிரசாதம் மாற்றப்பட்டிருப்பதை அறிந்தார்.

'பெண்ணே, சத்திரிய தேஜசுள்ள மகன் உன் தாய்க்கும், பிரம்மதேஜசு உள்ள மகன் உனக்கும் பிறக்க நான் பிரசாதம் கொடுத்தேன். அதை நீங்கள் மாற்றிச் சாப்பிட்டிருக்கிறீர்கள். அதன் பலன் உன் தாய் தவசியைப் பெறுவாள். நீ பல்லாயிரம் பேரைக் கொல்லும் ஒருவனைப் பெறுவாய்' என்றார்.

சத்தியவதியோ முனிபத்னியான தனக்கு அத்தகு மகன் பிறப்பதை விரும்பவில்லை. கணவரிடம் வேண்டினாள். ரிசீகர் மந்திர சக்தி வீணாகாது என்றுரைத்தார். இறுதியில் தனக்கு நன் மகன் பிறக்கட்டும், தனக்குப் பிறக்கும் பேரன் அப்படி இருக்கட்டும் என்று வேண்டினாள். ரிசீகரும் அவ்வாறே அருளினார்.

சத்தியவதிக்கு சாந்தகுணமுள்ள ஜமதக்னி பிறந்தார். ஜமதக்னி ரேணுகை என்பவளை மணந்தார். அவளுக்குப் பிள்ளைகள் பிறந்தனர். இளைய மகனே பரசுராமர். திரேதா யுகத்திலே சித்திரை மாதம் வளர்பிறை ஏகாதசியிலே சனிக்கிழமை இரவு ரோகிணி நட்சத்திரத்தில் பரசுராமர் திருவவதாரம் செய்தார். வீரராக வளர்ந்தார். வில்வித்தையில் சிறந்து விளங்கினார். சிவபிரானிடமே வில்வித்தைகளைப் பயின்றார்.

ஒருநாள் பரசுராமரின் தாய் ரேணுகை நீர்க் கொண்டு வர குடத்தோடு கங்கைக்குச் சென்றாள். அங்கே தேவ மடந்தையருடன் விளையாடிக் கொண்டிருந்த சித்ரரதன் என்ற கந்தர்வனைக் கண்டாள். அவன் அழகில் ஒரு கணம் மனம் பறி கொடுத்தாள். இதையறிந்த ஜமதக்னி முனிவர் கோபம் கொண்டு தன் புதல்வர்களைப் பார்த்து 'இவளைக் கொல்லுங்கள்' என்றார். மற்றவர்கள் தம் தாயைக் கொல்ல விரும்பாமல் பேசாதிருந்தனர். ஜமதக்னி பரசுராமரைப் பார்த்து, 'உன் தாயையும் என் கட்டளை மீறிய உன் சகோதரர்களையும் கொல்' என்றார்.

பரசுராமர் தந்தை வாக்கை சிரமேற் கொண்டார்; கொன்றார்.

மகிழ்ந்த தந்தை ''நீ விரும்பும் வரத்தைக் கேள்' என்றார்.

''தந்தையே! நான் கொன்ற இவர்கள் மீண்டும் உயிர்த்தெழ வேண்டும். நான் கொன்றேன் என்ற நினைவு அறவே இருக்கக்கூடாது' என்று கேட்டார்.

அப்படியே வரமருளினார் ஜமதக்னி முனிவர். இறந்தவர்கள் உறக்கத்தினின்றும் விழித்தாற் போன்று எழுந்தனர்.

பின் பரசுராமர் பிருகு முனிவருடன் புட்கரத்தில் தவம் செய்தார்.

அத்தருணத்தில் கார்த்தியவீரியார்ஜீனன் என்ற மன்னன் ஆண்டு வந்தான். அவன் சூரிய தேவரிடம் வரம் பெற்றவன். ஒரு அஸ்திரம் போட்டானென்றால் அது சமுத்திரநீரை வற்றச் செய்யும். தன் குருவாகிய தத்தாத்ரேயருடைய அருளினால் ஆயிரங்கரங்களை அடையப் பெற்றான். எழுநூறு (700)வேள்விகளைச் செய்தான். தேவர்கள் யாகத்தில் நேராகவே வந்து பூஜையை ஏற்றனர். பாதாளத்தில் நாகர்களை வென்று, நாக ரத்தினங்களைக் கொண்டு வந்து தன்னை அலங்கரித்துக் கொண்டான். அவனே ராவணனை ஐந்து அம்புகள் போட்டு அடக்கியவன். 85 ஆயிரம் வருடங்கள் ஆண்டவன். அம்மன்னனுடைய மரண காலம் நெருங்கியதால் அவன் மதி கெட்டது. ஒரு சமயம் வேட்டையாடிக் களைத்தவன் ஜமதக்னி முனிவருடைய ஆசிரமத்திற்குச் சென்றான். முனிவர் காமதேனுவின் உதவியால் மன்னருக்கு உயர்ந்த விருந்தளித்தார். கார்த்த வீரியார்ஜீனன் காமதேனுவைத் தான் அடைய விரும்பினான். முனிவர் தவப் பயனாகக் கிடைத்த பசுவை அன்னியருக்கு அளிக்க முடியாது என்று மறுத்துவிட்டார். நினைத்ததை அடையும் இயல்பு கொண்ட அம் மன்னன் முனிவருடன் போர் தொடுத்தான். காமதேனுவின் உதவியைக் கொண்டு முனிவரும் போர் செய்தார். பிரம்மதேவர் அங்கு வந்து இருவருக்கும் சமாதானம் கூறினார். மன்னன் தன் நகரம் திரும்பினான். ஆனால் மனம் சமாதானமாகவில்லை. மீண்டும் முனிவரை எதிர்த்துச் சென்றான். தத்தாத்ரேயரால் தனக்கு அளிக்கப்பட்டிருந்த சக்தி ஆயுதத்தால் ஜமதக்னியைக் கொன்றான். தடுத்த ரேணுகையையும் கத்தியால் குத்தினான். காமதேனு தப்பித்துக் கொண்டு தவஞ்செய்து கொண்டிருந்த பரசுராமரிடம் சென்று நடந்ததைக் கூறியது. பரசுராமர் ஆசிரமத்திற்கு விரைந்து வந்தார். 21 இடங்களில் கத்திக் குத்துப்பட்டுக் கிடந்த ரேணுகை மகனைக் கண்டதும் கதறி உயிர் விட்டாள். 21 முறை சத்திரிய குலத்தை நாசம் செய்வேன் என்று பரசுராமர் வீரசபதம் செய்தார்.

ரேணுகை கணவருடன் வைகுண்டமேகினாள்.

''நிருபர்க்கொரு பழிபற்றிட நில மன்னவர் குலமும்
கருஅற்றிட மழுவாள் கொடு களைகட்டு உயிர் கவரா
இருபத்தொரு படிகால் எழுகடல் ஒத்து அலை எறியும்
குருதிப் புனல் அதனில் புக முழுகித் தனிக் குடைவான்.''

அரசர்க் கூட்டத்தை அழிக்க வேண்டி பரசுராமர் தவம் செய்தார். பிரம்மதேவர் தரிசனமளித்தார். "உன் விருப்பம் ஈடேற வேண்டுமானால் சிவபிரானுடைய அருளையும் திருமாலின் அருளையும் பெற வேண்டும்'' என்று கூறி மறைந்தார்.

பரசுராமர் கைலாயம் சென்று சிவ பிரானைப் பணிந்தார். அதிக ஒளியும் சக்தியும் உள்ள 'பரசு' என்னும் கோடாலி ஆயுதத்தையும் அஸ்திரங்களையும் சிவபிரான் பரசுராமனுக்குக் கொடுத்தார். (இராமன் என்ற பெயருடன் இருந்தவர் இது முதல்தான் பரசுராமர் என்றழைக்கப்பட்டார்). மேலும் முக்கண்ணர் கிருஷ்ணமந்திரத்தையும் பரசுராமருக்கு உபதேசித்தார். அதைப் பெற்ற பரசுராமர் புட்கரஷேத்திரம் சென்று அம் மந்திரத்தை ஜபித்து தவம் செய்தார். பகவான் கிருஷ்ணர் தரிசனம் கொடுத்தார். "என் சக்தியின் ஒரு பகுதியை உனக்களிக்கிறேன். சபதத்தை நிறைவேற்றிய பிறகு நீ வென்ற அந்த பூமியைத் தானம் செய்துவிடு. நான் ஸ்ரீராமனாக அவதாரம் செய்வேன். உன்னிடமிருந்து என் சக்தியை மீண்டும் பெற்றுக்கொள்வேன்'' என்றருளினார்.

பிறகு அங்கு ஒரு ரதம் தோன்றியது. பரசுராமர் அதிலமர்ந்து கார்த்தவீர்யனுடைய நகரம் சென்றார். தன் வரவைத் தெரிவித்துத் தூதனை அனுப்பினார். அம் மன்னவன் கவசம் பூண்டு போருக்குக்கிளம்பினான். அவன் மனைவி மனோரமை தடுத்தாள். 'நாதரே! எனக்கு ஏற்பட்டுள்ள தீய கனவுகளால் நான் கலங்கிக் கொண்டிருக்கிறேன். ஒரு முறை முனிவரைக் கொன்று பிரம்மஹத்தி தோஷத்திற்கு ஆளானீர்கள். அப்பாவம் நீங்கச் சடங்கு எதுவும் செய்யவில்லை. அதற்குள் இன்னொரு முறை அதே பாவம் செய்வதற்காக புறப்படுகிறீர்கள். தயவு செய்து யுத்தம் செய்யாதீர்கள்'' என்று பலவாறு கூறித் தடுத்தாள்.

''அன்பே! நான் சத்திரியன். மரணத்திற்கு அஞ்சக் கூடாது. வெற்றி பெற்றால் மண்ணுலகில் ஆட்சி; மரணமடைந்தால் வீர சொர்க்கம்'' என்று திடமாகக் கூறினான் கார்த்தவீர்யன்.

பரசுராமரிடமிருந்து தன் கணவர் மீண்டு வரப் போவதில்லை என்று உணர்ந்தாள் மனோரமை; அவ்விடத்திலேயே அவள் உயிர் பிரிந்தது. மன்னன் கலங்கினான். அப்போது ஆகாசவாணி ஒலித்தது. 'மன்னனே, யுத்தம் செய்! விண்ணுலகம் உன்னை வரவேற்கும்.'

யுத்தம் நடந்தது. தொடர்ந்து ஏழு நாட்கள் நடந்தது. அவனுடைய ஆயிரம் கரங்களும் வெட்டுண்டன. இறுதியில் பரசுராமர் அவன் உயிரைப் பறித்தார்.

''ஆயிரம் குன்றம் சென்று தொக்கனைய
அடல்புரை எழில்திகழ் திரள்தோள்
ஆயிரம் துணிய அடல் மழுபற்றி மற்று
அவன் அகல் விசும்பணைய
ஆயிரம் பெயரால் அமரர் சென்றிறைஞ்ச
அறிதுயில் அலைகடல் நடுவே
ஆயிரம் சுடர்வாய் அரவணைதுயில்.றானரங்க
மாநகர் அமர்ந்தானே.''

பின் பரசுராமர் அம்மன்னன் பிள்ளைகளையும் பேரர்களையும் பூண்டோடு அழித்தார். சத்திரியர்களையெல்லாம் கொன்றார்.

கருவிலிருந்த சத்திரியர்கள் பிறந்து பூமி மீண்டும் நிறைய, மீண்டும் அவர்களை அழித்தார். இப்படி இருபத்தியோரு தலைமுறை அழித்தார். மொத்தம் 6 இலட்சத்து நாற்பதாயிரம் பேரைக் கொன்றார். அவர்கள் உதிரங்கள் நிறைந்து ஐந்து குளங்களாயின. அதற்குச் சமந்தபஞ்சகம் என்று பெயர். அங்கு தான் பரசுராமர் தன் பித்ருக்களுக்குத் தர்ப்பணம் செய்தார்.

அஸ்வமேத யாகம் செய்து அதன்முடிவில் இந்த பூமியை கஸ்யப முனிவருக்கு தட்சணையாகக் கொடுத்தார். தட்சணை பெற்ற கஸ்யபர் மிதியுள்ள சத்திரியர்களைக் காக்க எண்ணினார். ஆகவே, ''பரசுராமரே! தாங்கள் தென் கடற்கரையை நோக்கிச்சென்று விடுங்கள். எனக்கு அளிக்கப்பட்ட இந்த தேசத்தில் எவ்விடத்திலும் தாங்கள் வசிப்பது சரியல்ல''—என்று கூறினார்.

பரசுராமரும் அவ்வாறே சென்றார். சமுத்திரராஜர் மேற்றிசையில் ஒரு பாகத்தில் தேசத்தை உண்டு பண்ணிக் கொடுத்தார். அங்கு பரசுராமர் தவம் செய்தார். அதும்வ பரசுராமசேத்திரம் எனப்படும் கேரளம். பகவான் ஸ்ரீராமராக அவதரித்தபோது அவரை எதிர்த்து வந்து தன் புண்ணியமனைத்தையும் அவருக்களித்துச் சென்றார். மகான் பீஷ்மருடைய குருதேவர் பரசுராமர்.

பெருங்கீர்த்தி பெற்ற பரசுராமர் அவதாரம் பித்ருவாக்கிய பரிபாலனம், மாத்ருவாக்ய பரிபாலனம் என்ற இரு கடமைகளையும் உணர்த்துகிறது. பரசுராமர் ஏழு சிரஞ்சீவிகளில் ஒருவராக இன்றும் விளங்குகிறார்.

ஆயிரம் தாமரை போன்ற ஆயிரம் திருவடிகளும், ஆயிரம் பொன்மலை போன்ற ஆயிரம் தோள்களும், ஆயிரம் கதிரவன் போன்று ஒளிவிடும் ஆயிரம் மணிமுடிகளும் கொண்டு விளங்கும் இறைவனை ஆயிரம் திருப்பெயர்களிட்டு அழைக்கலாம். ஆயிரம் திருநாமம் கொண்டவன் ஆயினும் இறைவன் ஒருவனே.

—அப்பரடிகள்.

டாக்டர் மா. இராசமாணிக்கனார்

1 அதிபத்தர்— பரதவர் — நாகப்பட்டினம் (சோ)—முதல் மீன், நாளும் சிவனுக்கு விட்டவர்;ஒரே மீன் கிடைத்த பொழுதும் அதனைச் சிவனுக்கு விட்டுப் பட்டினி கிடந்தவர்; பொன் மீன் ஒன்றே கிடைத்த அன்றும் அதனைச்சிவனுக்கு விட்ட சிறந்த பக்தர்— கி.பி. 660-840. (சோ-சோழ நாடு)

2 அப்பூதியார்— பிராமணர் — திங்களூர் (சோ) — அப்பரையே தெய்வமெனக் கொண்டவர்; இறந்த மகனை மறைத்து அப்பருக்கு உணவு படைத்தவர்— கி.பி. 600— 660.

3 அமர்நீதியார்— வணிகர் — பழையாறை (சோ) சிவபிரான் கோவணம் தந்து ஆட்கொண்டார்; மனைவி மகனோடு துலை புக்கவர்; அப்பர்க்கு முற்பட்டவர்; பாடல் பெற்றவர். கி.பி. 400— 600.

4 அரிவாள் தாயர்— வேளாளர் — கணமங்கலம் (சோ). பிரசாதம் கால் இடறிக் கீழே விழத் தம் தலையை அரிய முயன்றார்; உடனே லிங்கத்திலிருந்து கைவந்து தடுத்தது. அப்பரால் பாடப் பெற்றவர்— கி.பி. 400—600.

5 ஆனாயநாயனார்— இடையர்—மங்கலவூர் (சோ)— பஞ்சாட்சரத்தை 7 சுரங்கள் பொருந்தக் குழலில் வாசித்தவர்—கி.பி. 660—840.

6 இசைஞானியார்— ஆதிசைவர்— திருநாவலூர் (ந) சுந்தரர் தாயார்; சிவனடியார். கி.பி. 840— 865. (ந-நடுநாடு)

7 இடங்கழியார்—சிற்றரசர் — கொடும்பாளூர்(சோ). ஆலயப்பூசனைகள் நடத்தினார்; நெல் திருட வந்த அடியார்க்கு வழங்கினார்; பலர்க்கும் தம் உடைமையெல்லாம் வழங்கினார்.— கி.பி. 600—840.

8 இயற் பகையார் — வணிகர்— புகார் (சோ)—சிவனுக்கு மனைவியைத் தரத் துணிந்தவர்; எதிர்த்த உறவினரைக் கொன்றவர்— கி.பி. 660— 840.

9 இளையான்குடி மாறர்— வேளாளர்— இளையான்குடி (சோ)-விதையைக் குற்றிச் சமைத்துச் சிவனடியாரை உண்பித்தவர் கி.பி. 660— 840.

10 உருத்திர பசுபதியார் — பிராமணர் — திருத்தலையூர் (சோ) கழுத்தளவு நீரில் நின்று உருத்திர மந்திரம் செபித்தவர்— கி.பி. 660—840.

11 எறிபத்த நாயனார்— மரபு கூறப்பட வில்லை— கருவூர் (சோ) புகழ்ச்சோழரின் யானையைக் கொன்றவர்—கி.பி. 400—600.

12 ஏயர்கோன் கலிக்காமர்— வேளாளர்— பெருமங்கலம் (சோ)—ஏயர் தலைவர்; சோழர் சேனைத் தலைவர்; சுந்தரரை வெறுத்தவர்; அவரைப் பார்க்கமறுத்துத் தம்மை மாய்த்துக் கொண்டவர்—சுந்தர ரால் எழுப்பப் பெற்றவர்— கி.பி. 840—865.

13 ஏனாதி நாதர்— சான்றார்— எயினனூர் (சோ)—வாள்வித்தை பயிற்றுவிப்பவர்; அவரைப் பகைவனான அதிசூரன் நீறு பூசி வந்து கொன்றான்—கி.பி. 660—840.

14 ஐயடிகள் காடவர்கோன்— பல்லவஅரசர். காஞ்சீபுரம் (தொ) பல நாடுகளையும் வென்றார். சைவத்தைப் பரப்பினார்; அரசை வெறுத்துத் தலங்களைத் தரிசித்து வெண்பாப் பாடினார்; 11-ஆம் திருமுறை யில் உள்ள க்ஷேத்திர வெண்பாக்கள் இவர் பாடியன— கி.பி. 400— 600. (தொ-தொண்டை நாடு)

15 கணநாதர்— பிராமணர்— சீகாழி (சோ) சைவசமயப் பணிகட்கு ஆட்களைத் தயாரித்தவர் —சம்பந்தரைப் பூசித்துப் பேறு பெற்றவர்— கி.பி. 600—660.

16 கணம்புல்ல நாயனார்— மரபு கூறப்பட வில்லை— இருக்கு வேளூர் (சோ)— விளக் கெரித்தவர். கணம் புல்லைஅறுத்து விற்று எண்ணெய் வாங்கி விளக்கு எரித்தவர்; அப்பரால் புகழப் பட்டவர்— கி.பி. 400— 600.

17 கண்ணப்பர்—வேடர் (தொ) - கண்ணை இடந்து அப்பியவர்; அப்பரால் புகழப் பட்டவர்— கி.பி. 400— 600.

18 கலிக்கம்பர்— வணிகர்— பெண்ணாகடம். (ந)—வேலையாள் காலைக் கழுவ நீர் வார்க்கத் தாமதித்த மனைவியின் கையை வெட்டினவர்— கி.பி. 660—840.

19 கலிய நாயனார் — வாணியர் — திருவொற்றியூர்(தொ) விளக்கெரித்தவர்- மனைவியை விற்கத் துணிந்தவர்; உதி ரத்தால் விளக்கு எரிக்கத் தலை அறுக்கச் சிவனால் ஆட்கொள்ளப்பட்டவர்— கி.பி. 660—840.

20 கழற்சிங்க நாயனார்— பல்லவ அரசர்— காஞ்சிபுரம் (தொ)— சிவத் தலங்கள் தோறும் மனைவியோடு சென்று தரி சித்துத் திருப்பணி செய்தவர் — இவர் மனைவி திருவாரூரில் பூ முகந்ததால் செருத்துணை நாயனார் மூக்கரிந்தார்; இவர் உடனே மனைவியின் கையை வெட்டினார்— கி.பி. 840-865.

21 காரி நாயனார்— மரபு குறிக்கப்பட வில்லை (பிராமணர்? திருக்கடவூர் (சோ) கோவைபாடி மூவேந்தரிடமும் சென்று பொருள் பெற்றுக் கோவில் கட்டியவர். கி.பி. 660-840.

22 காரைக்கால் அம்மையார் — வணிகர்— காரைக்கால் (சோ) பேய்வடிவம் கொண் டவர்; 1 மூத்ததிருப்பதிகம் 2.இரட்டை மணிமாலை 3. அற்புதத் திருவந்தாதி முதலியன பாடியவர் (11-ஆம் திருமுறை) சம்பந்தராற் பாடப்பட்டவர்— கி.பி. 400-600.

23 குங்குலியக் கலயர் — பிராமணர்— திருக்கடவூர் (சோ) தாலி விற்றுக் குங்கு லியப்பணி செய்தவர்; சிவனால் அளப்ப ருஞ் செல்வம் பெற்றவர்; திருப்பனந் தாளில் சாய்ந்திருந்த லிங்கத்தைத் தாமே இழுத்து நிறுத்தியவர்; சோழன் மதிப் பைப் பெற்றவர்; சம்பந்தர்க்கு விருந் தளித்தவர்— கி.பி. 600-660.

24 குலச் சிறையார் — மரபு கூறப்பட வில்லை— மணமேற்குடி (பா) அடியாரை ஆதரித்தவர்; பாண்டியனின் மந்திரி, சம் பந்தரை வரவழைத்துப் பாண்டியனைச் சைவர் ஆக்கினவர் கி.பி. 640-680. (பா-பாண்டிநாடு)

25 கூற்றுவ நாயனார்— அரசர் —களந்தை (சோ) பல அரசர் நாடுகளைக் கவர்ந்து ஆண்டவர்; பஞ்சாட்சரம் உச்சரித்தவர்; இறைவனால் முடி சூடப் பெற்றவர்; முடி சூடமறுத்த தீட்சிதர் அஞ்சிச் சேரநாடு சென்றனர்— களப்பிரர் காலம் கி.பி. 400-600.

26 கோச்செங்கட்சோழர்— சோழ அரசர்— சிதம்பரம் (சோ) சிவனருள் பெற்றவர்; பேரரசர்; கோவில்கள் கட்டியவர்; தீட்சி தர்க்கு மாளிகைகள் கட்டியவர்; அப்பர் சம்பந்தராற் பாடப்பட்டவர்— கி.பி. 400-600.

27 கோட்புலிநாயனார் — வேளாளர் சோழர் சேனாபதி— திருநாட்டியத்தான் குடி (சோ) —சிவனடியார்க்கென வைத் திருந்த நெல்லை உறவினர் காவலில் விட்டுப் பகைவரோடு போராடச் சென் றார்; உறவினர் நெல்லைத் தின்றுவிட்ட னர்; அவர் அனைவரையும் நாயனார் கொன்றார்; இவர் புதல்வியரைச் சுந்தரர் புதல்வியாக ஏற்றார். சுந்தரர் காலத்த வர்; கி.பி. 840— 865

28 சடைய நாயனார்— ஆதிசைவர் — திரு நாவலூர் (ந) சுந்தரரின் தகப்பனார்— கி.பி. 840— 865

29 சண்டேசுவரர்—பிராமணர்— திருச்சேய்ஞூர் (சோ) மணல் லிங்கத்திற்குப் பால் அபிஷேகம் செய்வர்; தந்தை காலை வெட்டியவர்; அப்பர் சம்பந்தரால் புகழப் பட்டவர்— கி.பி 400— 600,

30 சத்தி நாயனார்— வேளாளர்-விரிஞ்சியூர் (சோ) சிவனடியாரை இகழ்பவரை நாவறுத்தவர்— கி.பி. 600—840

31 சாக்கிய நாயனார்— வேளாளர் — சங்க மங்கை (சோ)-காஞ்சி சென்று பல சமயங் களை ஆராய்ந்தவர்; பௌத்த வேடத் துடனே சிவலிங்க வழிபாடு செய்தவர் ; கல்லெறிந்து வழிபட்டவர்— கி.பி. 400-600.

32 சிறப்புலி நாயனார் — பிராமணர்— திருஆக்கூர் (சோ)-பஞ்சாட்சரம் செபித்த வர்; யாகம் செய்தவர் கி.பி. 600—840.

33 சிறுத்தொண்டர் — (மாமாத்திரர்) திரு வெண்காடு (சோ)— பல்லவர் சேனைத் தலைவர்; அடியார் உபசரணை யில் சேர்ந்தவர் ; பிள்ளைக்கறி சமைத்து ஶ்பரவர்க்குப் படைத்தவர். வாதாபியை வென்றவர். சம்பந்தர் காலத்தவர் கி.பி. 600-660.

34 சுந்தரமூர்த்தியார் — ஆதிசைவர் —திரு நாவலூர்(ந) கோவிலில் மணம் செய்தவர்; இரு பெண்களை மணந்தவர் ; தலங்கள் தோறும் சென்று பாடியவர். கி.பி. 840-865.

5. செருத்துணையார்-வேளாளர் — ஆரூர் (சோ)—கழற்சிங்க நாயனார் மனைவியின் மூக்கரிந்தவர்— கி.பி. 840-865.

36 சேரமாள் பெருமான்— அரசர்— கொடுங் கோளூர் (சோ)—பல தலங்களைத் தரி சித்தவர்; சுந்தரரோடு கயிலை சென்றவர் பாணபத்திரற்குப் பொன் தந்தவர் ;

37 சோமாசி மாறர்-பிராமணர் - திருவம்பர் (சோ) - சாதிபேதம் காணாதவர்; வேத விதிப்படி யாகம் செய்தவர். சுந்தரரைப் பூசித்தவர்— கி.பி. 840-865.

38 தண்டியடிகள்— மரபுகூறப்படவில்லை— திருவாரூர் (சோ) குளம் வெட்டல் முதலிய தொண்டுகள் செய்தவர் ; சமண ரோடு வாதிட்டுக் கண் பெற்றவர்; சமணரைத் திருவாரூரில் இருந்து விரட்டி னார்; சமணப் பாழிகளை அழித்துக் குளம் கட்டினார்; நமிநந்தி அடிகள் காலத்தவர். கி.பி. 400-600.

39 திருக்குறிப்புத் தொண்டர்— வண்ணார் காஞ்சிபுரம் (தொ) சிவனால் ஆட்கொள் ளப்பட்டவர்; மழையால் அடியாரது ஆடைகாய முடியாததால் பாறையில் தலையை மோதினார். சிவனார் தடுத்து ஆசீர்வதித்தார்— கி.பி. 660-840.

அடியார் பெருமையை அளவிட வல்லார் யார் ?

கருங்கடலைக் கையினால் நீந்திக் கடக்கலாம்;

வானத்திலுள்ள விண்மீன்களை எண்ணலாம்;

கடல் மணலை எண்ணலாம்;

கடலுக்குள் வாழும் மீன்களை எண்ணலாம்;

கடல் அலைகளை எண்ணலாம்;

மகேசன் மலர்ப்பாதம் சூடும் அடியார் மாப்புகழை அளவிட "தொண்டர்சீர் பரவுவார்" சேக்கிழாருக்கு ஆகுமே அன்றி, வேறெவர்க்கும் ஆகாது.

—உமாபதி சிவனார்

R. RAJU,
Dy. Commissioner, HQrs.
(Retired)
HR&CE Administration Dept

40. திருஞான சம்பந்தர் — பிராமணர்— சீகாழி (சோ) — சமணரை வென்றவர் ; பாண்டியனைச் சைவனாக்கினவர்; தோற்ற சமணர் கழுவேறினர்—கி. பி. 600-660.

41. திருநாவுக்கரசர்— வேளாளர் — திருவா மூர் (தொ) — தொண்டை நாட்டைத் தூய்மைப் படுத்தியவர்; பல்லவனைச் சைவராக்கினவர்— கி.பி. 600-660.

42. திருநாளைப்போவார்— ஒப்பிலவர்— ஆத னூர் (சோ)—தோல், வார் முதலியன கோவிலுக்கு உதவியவர் ; பல தலங்களை தரிசித்தவர் ; சிதம்பர தரிசனம் கண்ட வர்; எரி மூழ்கிப் புகழ் உடம்பு பெற்ற வர். கி.பி. 660--840

43. திருநீலகண்டர்— குயவர் — சிதம்பரம் (சோ)—சிவன் திருவோட்டுத் திருவிளை யாடல்-தொண்டர் பரத்தையிடம்போன தால் உண்டான ஊடல் சிவனால் தீர்க்கப் பெற்றவர்— கி.பி 660-840

44 திருநீலகண்ட யாழ்ப்பாணர்— பாணர் எருக்கத்தம் புலியூர் (தொ)—பல தலங் களைத் தரிசித்தவர். பஞ்சாட்சரத்தை யாழிலே வாசித்தவர் ; மதுரையில் சிவ கட்டளையால் திருமுன் சென்றவர்; பொற்பலகையில் இருந்து யாழ் வாசித்த வர்; சம்பந்தர் காலத்தவர்— கி.பி. 600-660.

45. திருநீலநக்க நாயனார்— பிராமணர்— சாத்தமங்கை (சோ) — லிங்கத்தின் மீது விழுந்த சிலந்தியை ஊதிய மனைவியைத் துறந்தவர்; மறுநாள் கடவுள் கட்டளைப் படி மனைவியைச் சேர்த்துக்கொண்டவர். சம்பந்தர் காலத்தவர்;-சம்பந்தர் மணத்தில் சோதியிற் கலந்தவர் கி.பி. 600-660

46. திருமூலர்— மரபு கூறப்படவில்லை— வட நாடு— மூலன் என்னும் இடையன் உடம்பிற் புகுந்தவர்; தமிழ் கற்றுத் திருமந்திரம் 'பாடியவர். கி.பி 400-600

47. நமிநந்தி அடிகள்— பிராமணர்— ஏமப் பேரூர்(சோ)—விளக்கெரித்தவர்; சமணர் பரிகசித்ததால் சிவனருள் பெற்று விளக்கெரித்தார்; தண்டி அடிகள் காலத்தவர்; கோவில் திருப்பணி செய்து வாழ்ந்தவர்; அப்பரால் பாடப் பெற்றவர்— கி.பி. 400-600.

48. நரசிங்க முனை அரையர்— சிற்றரசர்— திருநாவலூர்(ந)—சுந்தரரைவளர்த்தவர்; சிவநெறி தழைக்க ஆண்டவர்; தூர்த்த வேடரான அடியார்க்குப் பொன்னும் உணவும் தந்தவர்; சுந்தரர் காலத்தவர் கி.பி. 840—865.

49. நெடுமாற நாயனார்— பாண்டிய அரசர் — மதுரை (பா)—சமணர், சம்பந்தர் மடத்தைக் கொளுத்த இசைந்தவர்; பின் சைவரானார்; பல தலங்களைத் தரிசித்தவர். கி.பி. 600— 660.

50. நேச நாயனார்— சாலியர்— காம்பீலி-அடியார்க்குப் பல வகை ஆடைகளை நெய்து கொடுத்தவர்— கி.பி. 660-840.

51. புகழ்ச்சோழர்— பேரரசர் — உறையூர் (சோ)—கொங்கர் குடகர் திறைகட்ட ஆண்டவர்; பகைவர் தலைகளுள் சிறிய சடையுடைய தலை கண்டு, தம் வீரர் சிவனடியார் ஒருவரைக் கொன்றதாக எண்ணி வருந்தி நெருப்பிலே விழுந்தவர் — கி.பி. 500-600.

52. புகழ்த்துணை நாயனார்—ஆதி சைவர். செருவிலிபுத்தூர் (சோ) சிவாகம முறைப் படி அர்ச்சனை செய்தவர்— பஞ்சம்— பசி— உடல் மெலிவு— கலசம்— திருமுடி மேல் வீழத் தூங்கினார்; பஞ்சம் நீங்கும் வரை நாளும் ஒரு காசு சிவனருளால் கோவிலிற் கிடைக்கப் பெற்று தொண்டு செய்தவர்; சம்பந்தரால் பாடப் பெற்றவர்— கி.பி. 400-600.

53. பூசலார் நாயனார்— பிராமணர்— திருநின்றவூர் (தொ) — மனத்தால் கோவில் கட்டினர்; கயிலாசநாதர் கோவில் கட்டிய இராஜசிம்மன் காலத்தவர், கி.பி. 685-720.

54. பெருமிழலைக் குறும்பர்— சிற்றரசர் (குறும்பர்) பெருமிழலை (சோ) — பஞ்சாட்சரத்தை ஜபித்தவர்; சுந்தரர் காலத்தவர்; சுந்தரர்க்கு முன் யோக முயற்சியால் உடலை விட்டுக் கயிலை சென்றவர் — கி.பி. 840-865.

55, மங்கையர்க்கரசியார்— இராணியார்— மதுரை (பா)—சோழன் மகளார்— கணவனைச் சைவன் ஆக்கினவர்; சம்பந்தர் காலத்தவர்— கி.பி. 600-660.

56. மானக்கஞ்சாறர் — வேளாளர் (சேனாதிபதி) கஞ்சாறு (சோ) — பரம்பரைச்சேனாதிபதி— ஏயர்கோன் மாமனார்— தம் ஒமர மகளான மணப்பெண் கூந்தலைச் சிவ னடியார் கேட்க அரிந்தீந்தவர்—கி.பி. 840-865.

57. முருக நாயனார்— பிராமணர்— திருப்புகலூர். —(சோ) பூமாலைகள்கொடுத்தவர்; சம்பந்தர் திருமணத்தில் சோதியிற் கலந்தவர்—கி.பி. 600-660.

58. முனையடுவார்—வேளாளர்— திருநீடூர் (சோ) தோற்றவர்க்காகப் போரிட்டுப் பணம் பெற்று சிவன் அடியார்க்கு உதவி வந்தவர்— கி.பி. 660-840.

59. மூர்க்க நாயனார்—வேளாளர்— திருவேற்காடு (தொ) மகேசுவர பூசைசெய்தவர்; சூதாடி அடியார் சேவை செய்தார்; சூதிலே மறுத்தவரைக் கத்தியால் குத்தினார். கி.பி. 600-840.

60. மூர்த்தி நாயனார்-வணிகர் -மதுரை (பா)- சந்தனக் காப்புச்செய்தவர். பாண்டியனை கருநாடக (களப்பிர) அரசன் வென்று மதுரையை ஆண்டான்; சமண மன்னன்; மூர்த்தியார்க்குச் சந்தனம்கிடைக்காதபடி செய்வான்; மூர்த்தியாளர் கையைப்ப சந்தனக் கல்மீது தேய்த்தார்; கை தேய்ந்தது; மூளை வந்தது. அரசன் இறக்க, வணிகர் சிவ வேடத்துடன் அரசர் ஆனார் —களப்பிரர் காலம்—கி.பி. 400-600.

61. மெய்ப்பொருள்நாயனார் — சிற்றரசர்— திருக்கோவலூர் (ந)-முத்தநாதன் அடியார் வேடத்தில் வந்து இவரைக் கொன்றான். கி.பி. 660-840.

62. வாயிலார் நாயனார்— வேளாளர், மயிலாப்பூர் (தொ)— உள்ளத்தைக் கோயிலாக்கி மனதில் பூஜை செய்தவர்— கி.பி. 660— 840.

63. விறல்மிண்ட நாயனார்— வேளாளர் — செங்குன்றூர்(சே) அடியார்களை வணங்குபவர்; அவர்களோடு இருந்தவர்; பல தலங்களைத் தரிசித்தவர் ; சுந்தரரைத் திருத்தொண்டத் தொகைப் பாடச் செய்தவர். (சே-சேரநாடு)



புலவர் பொன். திருக்கண்ணபுர சுப்பிரமணியன்

''நுண்ணியான் மிகப்பெரியான்
ஓயுளார் வாயுளான்
தண்ணியான் வெய்யான்நம்
தலைமேலான் மனத்துளான்
திண்ணியான் செங்காட்டங்குடியான்
செஞ்சடை மதியக்
கண்ணியான் கண்ணுதலான்
கணபதீச் சரத்தானே''

— திருஞான சம்பந்தர்

''கல்லாதார் மனத்தணுகாக் கடவுள் தன்னைக்
கற்றோர்கள் உற்றோருங் காதலானைப்
பொல்லாத நெறியுகந்தார் புரங்கள் மூன்றும்
பொன்றிவிழ அன்றுபொரு சரந்தொட்டானை
நில்லாத நிணக்குரம்பைப் பிணக்கம் நீங்க
நிறைதவத்தை அடியேற்கு நிறைவித்
தென்றுஞ்
செல்லாத செந்நெறிக்கே செல்விப் பானைச்
செங்காட்டங் குடியதனிற் கண்டேன்
நானே''

— நாவுக்கரசர்

முற்றத்துறந்த பெரியாரான தாயுமான சுவாமிகள் மற்றொரு பெருந்துறவியாரைப் புகழ்ந்து பாடினார். ''பாரனைத்தும் பொய் யெனவே பட்டினத்துப் பிள்ளையைப் போல் ஆருந்துறக்கை அரிதரிது'' என்பதும், ''ஓட் டுடன் பற்றின்றி உலகைத் துறந்த செல்வப் பட்டினத்தார் பத்ரகிரி பண்புணர்வதெந் நாளோ'' என்பதும் அவர்தம் திரு வாக்குகள். அத்தகைய பெருந்துறவு பூண்ட பட்டினத் தடிகள் செயற்கரும் செயல் செய்த மூன்று பெரி யார்களை ஒரு பாடலில் அமைத்துப் போற்று கிறார்.

''வாளால் மகவரிந்தூட்ட
வல்லேன்அல்லேன் மாதுசொன்ன
சூளால் இளமை துறக்க
வல்லேன் அல்லேன் தொண்டு செய்து.
நாளாறில் கண்ணிடந் தப்ப வல்லேன்
அல்லேன் நானினிச் சென்று
ஆளாவ தெப்படியோ
திருக்காளத்தி யப்பனுக்கே''

என்பது பாடல். அறுபத்து மூன்று நாயன்மார் களில் சிறுத்தொண்டர், திருநீலகண்டர், கண்ணப்பர் அம்மூவரிலும் மூலாதாரமாக முதலாவதாக வைத்தெண்ணப்பட்டவர் சிறுத்தொண்டர். அதற்குக் காரணமும் உண்டு. மற்ற நாயன்மார்கள் தனியாகவோ அல்லது தாமும் தம் மனைவியருமாகவோ அற் புதச் செயல்கள் புரிந்தார்கள். ஆனால் சிறுத் தொண்டர் தாமும், மனைவியாகிய வெண் காட்டு நங்கையும், அவ்விருவரின் அரும்பெரு மகவான சீராளதேவரும், அவர்களுடைய பணிப்பெண்ணான சந்தன நங்கையும் சேர்ந்து செயற்கரும் செயல் செய்து ஆண்ட வன் அருள் பெற்ற வரலாறு யாவரும் அறிந்ததே. அவ்வற்புதச் செயல் நிறைந்த பொற்புடைய திருவூரேதிருச்செங்காட்டங்குடி.

திருச்செங்காட்டங்குடி என்ற இப்பாடல் பெற்ற பழம்பதி சோழநாட்டுச் சிவத்தலங் களுள் ஒன்று. இது நாகை காயிதே மில்லத் மாவட்டத்தில் நன்னிலம் வட்டத்திலிருக் கிறது. மயிலாடுதுறை— அறந்தாங்கி இருப்புப் பாதையில் நன்னிலம் எறை புகைவண்டி நிலை யத்திலிருந்து ஏறக்குறைய ஆறுகல் தொலை விலிருக்கிறது. நன்னிலத்திலிருந்து நாகை செல்லும் பேருந்தில் கிழக்கில் நாலு கல் தொலைவிலுள்ள திருப்புகலூர் (அப்பர்பெரு மான் இறைவன் திருவடி அடைந்த ஊர்) சென்று, முடிகொண்டான் ஆற்றைக் கடந்து தெற்கே ஒரு கல் தூரத்திலுள்ள அருள் வழங்கும் சௌரிராசப் பெருமானை வழிபட்டு திருக்கண்ணபுரத்தைச் சேர்ந்து அங்கிருந்து கிழக்கே ஒரு கல் தொலைவு போய்த் திருச் செங்காட்டங்குடியை அடையலாம். இத்தலத் திற்கு நேரிடையாக வர திருவாரூர் நகரப் பெருந்துகள் வழி தட எண்: 13, 14 மூலம் எளிதில் அடையலாம். இத்தலத்தில் பல வகுப் பினருக்குச் சொந்தமான சத்திரங்கள் சுமார் 50 இருக்கின்றன.

முடிகொண்டான் ஆற்றுக்கும் புத்தாற் றிற்கும் இடையே அமைந்துள்ள இப்பதியை, ''காவேரித் திருநாட்டு வளங்காட்டும் செங் காட்டங்குடியாகும்'' என்று மனதாரப்பாடித் துதிக்கிறார் சேக்கிழார் சுவாமிகள். ஊருக்குச் செங்காட்டங்குடியென்றும், இறைவன் எழுந் தருளியுள்ள இடத்திற்கு கணபதீச்சுரம் என்றும் பெயர்கள் வழங்கப்படுகின்றன.

திருச்செங்காட்டங்குடிக்கு வேறு எட்டு பெயர்கள் உள்ளன. சிவபெருமான் தேவர், முனிவர்களுக்கு மகாமந்திரங்களை உபதேசித்த தால் மந்திரபுரியென்றும், சத்தியாஷாட முனிவர் தவத்தை, அழிக்க வந்த அசுரர்களைச் சிவபெருமான் கொன்றபோது இரத்தம் சிந்திய தால் செங்காடு என்றும், சத்தியாஷாடர் வழிபட்டதால் சத்தியபுரி என்றும், பிரமன் பூசித்ததால் பிரமபுரி என்றும், பிரமனுக்காகப்

பொய்சாட்சி புகன்ற தாழம்பூ பெற்ற சாபம் நீங்க இங்கு காட்டாத்தி மரமாக முளைத்தமையால் ஆத்திவனம் என்றும், மகாசிவராத்திரி காலத்தில் சூரியன் வழிபட்டதால் பாஸ்கரபுரி என்றும், வருணன் இலிங்கத்தை நிலைநிறுத்தி வணங்கியதால் சமுத்திரபுரி என்றும், இந்திரன் வழிபட்டுப் பேறு பெற்றதால் இந்திரபுரி என்றும் பெயர்கள் ஏற்பட்டன. இதைத் தல புராணம் ஒரு பாடலில் அமைத்துக் காட்டுகிறது.

''மந்திரபுரி செங்காடு சத்தியபுரி மலரோன்
தந்திரபுரி ஆத்தியின் வனம்சுடர் தயங்குப்
முந்து பாஸ்கரபுரி சமுத்திரபுரி முடிசேர்
இந்திரன் மகிழ் கணபதீச்சரம் பெயரெட்டே''

செங்காட்டங்குடி, கணபதீச்சரம் என்ற பெயர்கள் ஏற்பட்டதற்கு வேறு வரலாறும் புராணங்களில் கூறப்படுகிறது. விநாயகப்பெருமான் கஜமுகாசுரனைக் கொன்றபோது குருதி பெருகிச் செங்காடாய்ப் போனமையால் செங்காட்டங்குடியென்றும் அவனைக் கொன்ற பாவம்தீர இறைவனை அவர் வழிபட்டதால் கணபதீச்சரம் என்றும் பெயர்கள் உண்டாயிற்று என்று திருவிளையாடற்புராணம் கந்தபுராணம் முதலியவற்றில் கூறப்பட்டிருக்கிறது. ''கரிமுகத்தவுனற் காய்ந்து கரிமுகத் தண்ணல் பூசைபுரி சிவநகரம் ஈது'' என்பது திருவிளையாடற் புராணக்கூற்று. சம்பந்தர் தேவாரத்திலும் கணபதீச்சரம் என்ற பெயரை கூறுகிறார். கணபதீச்சரம் என்பதைப் பற்றி வரலாற்றுப் பேரறிஞர்கள் செய்திருக்கும் ஆராய்ச்சி முடிவுகளை ஒருவாறு தெரிந்து கொள்வது அவசியம். இத்தலத்தில் அவதரித்த சிறுத்தொண்டர், பரஞ்சோதியார் என்ற பெயருடன் நரசிம்மவர்ம பல்லவனிடம் சேனைத் தலைவராக இருந்தார். அவர் படையுடன் வடதிசை சென்று வாதாபி நகரை அழித்து மீண்டபோது வெற்றிச் சின்னமாகக் கொண்டு வந்த கணபதி விக்கிரகமே வாதாபி கணபதி என்றும், அதை இவ்வூரில் பிரதிஷ்டை செய்ததால் கணபதீச்சரம் என்ற பெயர் உண்டாயிற்று என்றும், அதுமுதல்தான் தமிழ்நாட்டில் விநாயக வழிபாடு ஏற்பட்டதென்றும், ஆராய்ச்சியாளர் சிலர் கருதுகின்றனர். வாதாபி போர் நடந்தது கி. பி. 642-ல் என்பர். மற்றொருசாரார், அதற்கு முன்பே கணபதி வழிபாடு தமிழ்நாட்டில் இருந்ததென்று கூறுகின்றனர். சேக்கிழார்

''மன்னவற்குத் தண்டுபோய் வடபுலத்து
வாதாவித்
தொன்னகரந் துகளாகத்துளை நெடுங்கை
வரையுகைத்து
பன்மணியு நிதிக்குவையும் பகட்டினமும்
பரித்தொகையும்
இன்னனவெண் ணிலகவர்ந்தங் கியலரசன் முன்
கொணர்ந்தார்''

என்று பரஞ்சோதியர் வாதாபி நகரத்தை அழித்துப் பெரும் பொருள் கொண்டு மீண்டதைக்கூறியிருக்கிறார். பொருள்கள் கொண்டு வந்ததில் விநாயக உருவமும் ஒன்றாக இருப்பின் அதைச்

சேக்கிழார் கூறாமல் விட்டிருக்க மாட்டார். சம்பந்தரும் சிறுத்தொண்டரும் சமகாலத்தவர், காழியர்கோன் திருச்செங்காட்டங்குடி வந்தபோது சிறுத்தொண்டர் வரவேற்று உபசரித்

தார். திருஞானசம்பந்தர் இவ்வூருக்கு வருவதற்கு முன்பே சீகாழிப் பதியில் பாடிய பாடலொன்றில் ''ஒற்றைச்சேர் முற்றற்கொம்புடைத் தடக்கை முக்கண் மிக்கோவாதே பாய் மாதனத்துறு புகர்முக இறை'' என்று அருளியதால் கணபதி வழிபாடு முன்னாலேயே இருந்ததென்பர் இக்கொள்கையுடையவர்கள்.

இனி, ஆலயத்தின் அமைப்பை ஒரு சிறிது அறிந்துகொள்ள முற்படுவோம். இறைவன் திருக்கோயில் கிழக்கு நோக்கியிருக்கிறது. கிழக்கு, மேற்கு, தெற்குப் புறங்களில் திருவாயில்கள் உள்ளன. கோபுரங்களும் உள்ளன. இரண்டு பிரகாரங்கள் கோயிலுக்குள் இருக்கின்றன. உட்பிரகாரத்திற்குச் செல்லும் வாயிலின் மேலும் மூன்று மாடக் கோபுரம் உண்டு; கிழக்கு வாயில் வழியே உள் நுழைந்ததும் வலதுபுறம் தெற்கு நோக்கி அம்பிகையின் சந்நிதி இருக்கிறது. தேவியின் திருநாமங்கள் வாய்த்த திருக்குழலி, திருக்குழல் நாயகி, சூளிகாம்பாள் என்பன. கிழக்கு உட்பிரகாரத்தில் தென்புறம் சிறுத்தொண்டர், மனைவி, மகன் தாதி இவர்களின் படிமங்கள் காணப்படுகின்றன. தெற்கு உட்பிரகாரத்தில் அறுபத்து மூவர், பிரமன், அர்த்தநாரீசுவரர், நால்வர், சங்கநிதி, பதுமநிதி முதலியோர் சந்நிதிகள் உள்ளன. இப்பிரகாரத்தின் தென்மேற்கு நடுவில் அருள்மிகு வாதாபி கணபதி எழுந்தருளியிருக்கிறார். மேற்கு உட்பிரகாரத்தில் சம்பந்தர், விநாயகர், சத்தியாஷாடலிங்கம், முருகன் முதலியோர் சந்நிதிகளும், வடக்கு உட்பிரகாரத்தில் நவதாண்டவ மூர்த்திகள் முதலியோர் சந்நிதிகளும் இருக்கின்றன.

கர்ப்பக்கிரகத்தில் மூலஸ்தானமூர்த்தி பக்தர்களுக்காக எழுந்தருளியுள்ளார். கணபதீசுவரர் என்பது அவர் திருப்பெயர்: மேலே சொல்லப்பட்ட இத்தலத்தின் பெயர்களைக் கொண்டும் இவருக்கு மந்திரபுரீசர், ஆத்திவனநாதர், பாஸ்கரபுரீசர், சமுத்திரபுரீசர், இந்திரபுரீசர் என்ற வேறு பெயர்களையும் தல புராணம் கூறுகிறது. மூலவர் கர்ப்பக்கிரகத்திற்குத் தென்புறம் அருள்மிகு உத்திராபதீசுவரர் சந்நிதி இருக்கிறது. இத்தலத்தின் பெருமை வாய்ந்தமூர்த்தி ஆவார். வடநாட்டார் வேடம் தாங்கி வந்து சிறுத்தொண்டரைப் பிள்ளைக் கறியமுது கேட்டு, அப்படியே அவர் செய்ய, பின்னர் அக்குழந்தை உயிர்த்தெழ அருளிய திருக்கோலம் அது.

இத்தலவிருட்சம் ஆத்தி, அரியும் அயனும் சிவபெருமானின் அடி முடி தேடியபோது பிரமனுக்காகத் தாழம்பூ பொய் சாட்சி கூறியது. ஆகையால் அதற்குத் திருச்செங்காட்டங்குடியில் காட்டாத்தி மரம் ஆகும் சாபம் ஏற்பட்டது. இது திருவண்ணாமலை தலபுராணத்திலும், இத்தலபுராணத்திலும் கூறப்பட்டிருக்கிறது. அருள்மிகு உத்திராபதியார் இந்த மரத்தினடியில் தங்கியிருந்தார் என்பதை 'கணபதீச்சரத்தின்கண் வண்ணமலர் ஆத்தியின் கீழ் இருக்கின்றோம்'' என்று பெரிய புராணம் கூறுகிறது.

இத்தலத்திற்கு முக்கியமான தீர்த்தங்கள் இரண்டு. சத்திய தீர்த்தம் என்ற திருக்குளம் இருக்கிறது. சத்தியாஷாட முனிவர் இங்கு நீராடி இறைவனை வழிபட்டார். சிவபெருமான் சூலத்தை ஊன்றி ஏற்பட்டதால் இதற்கு சூலதீர்த்தம் என்ற மற்றொரு பெயரும் உண்டு. சூரிய தீர்த்தம் என்ற மற்றொரு திருக்குளம் மேலக் கோபுரவாசல் பக்கம் இருக்கின்றது. இவையன்றி இந்திர தீர்த்தம், யமதீர்த்தம், அக்னிதீர்த்தம், வருணதீர்த்தம், வாயுதீர்த்தம் சந்திரபுட்கரிணி தீர்த்தம் முதலியவைகளும் இத்தலத்திற் உள்ளன.

திருக்கோயிலில் தினந்தோறும் ஐந்து கால பூஜை நிகழ்கின்றன. சித்திரை மாதம் சித்திரைப் பரணிப் பெருவிழா வெகு விமரிசையாக நடைபெறுகின்றது. ஆறாம் திருநாள் பரணி நட்சத்திரத்தில் இறைவன் சிறுத்தொண்டரிடம் அமுதுகேட்ட (பிள்ளைக்கறி) அமுது படையல் விழாக் கொண்டாடப்படுகின்றது. இவ்விழாவில் கலந்து கொண்டு இறைவன் திருவருளைப் பெற்றுச் செல்ல, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்து பக்தர்கள் இத்தலத்திற்கு ஒரு சேர கூடுவது கண் கொள்ளாக்காட்சியாகும். பல மாவட்டங்களில் உள்ள சிறுத்தொண்டர் நாடகக் குழுக்கள், இறைவன் இத்தலத்தில் நடத்திக் காட்டிய அற்புதத்தை படம் பிடித்துக் காட்டுகின்றார்கள் என்றால் மிகையாகாது. அருள்மிகு உத்திராபதியார் வெள்ளை சாத்தி புறப்பாடு வேறு எந்த ஆலயத்திலும் காணாத புறப்பாடு ஆகும். இத்திருவிழாவின் 21-ஆம் நாள் திருவோண நட்சத்திரத்தன்று ஐயடிகள் காடவர்கோனுக்குக் காட்சியளிக்கும் ஐதீகமும் நடை பெறுகிறது. ஐப்பசி மாதப் பரணி நட்சத்திரத்திலும் அருள்மிகு உத்திராபதீசுவரர் வெளியில் எழுந்தருளி பக்தர்களுக்கு காட்சியருள்கிறார். ''ஆறுதிங்கள் ஒழிந்துண்போம்' என்று பெரிய புராணத்தில் கூறியதற்கிணங்க, சித்திரைப்பரணியிலும் ஐப்பசிப் பரணியிலும் அருள்மிகு உத்திராபதியார் எழுந்தருள்கிறார்.

திருஞானசம்பந்தர் இத்தலத்து இறைவன் மீது மூன்று திருப்பதிகங்கள் ஓதியருள்கிறார். அவைகளில் ஒரு திருப்பதிகத்தில் திருமருகலையும் திருச்செங்காட்டங்குடியையும் வினாவுரையாகப் பாடியுள்ளார். ''அங்கமும் வேதமும்'' என்று தொடங்குவது அப்பதிகம். ''செங்காட்டங்குடியதனுள் கணபதீச்சரம்'' என்று கூறுவதால் ஊருக்குச் செங்காட்டங்குடியென்றும், கோயில் இருக்கும் இடத்தைக் கணபதீச்சரம் என்றும் கொள்ளக் கிடக்கிறது. ஒரு பாடலில் ''செந்தமிழர்கள் பரவியேத்தும் சீர்கொள் செங்காட்டங்குடி'' என்று சொல்கிறார். மற்றொரு பதிகப்பாடல் ஒன்றில் ''பொடிநுகரும் சிறுத்தொண்டருக்கருள் செய்யும் பொருட்டு கடிநகராய் வீற்றிருந்தான் கணபதீச்சரத்தானே'' என்று சிறுத்தொண்டருக்கருள் செய்யும் பொருட்டு இறைவன் வீற்றிருக்கின்றான் என்று குறிப்பிடுகிறார். இன்னொரு பதிகம், தலைவி நாரை முதலிய பறவைகளைத் தலைவனாகிய சிவபெருமானிடத்தில் தூதாகச்

சென்று தன் நிலையை உரைக்குமாறு வருந்திக் கூறுவதாக அமைந்துள்ளது. ஒரு பாடலில் ''சீராளன் சிறுத்தொண்டன் செங்காட்டங்குடி மேய பேராளன் பெருமான் தன் அருள் ஒரு நாள் பெறலாமே'' என்று அருள்கிறார்.

திருநாவுக்கரசர் ஒரு பதிகம் பணித்தருளி யிருக்கிறார். இறைவன் திருமேனி, திருவிளையாடல்கள் முதலியவற்றை அழகுபடச் சித்தரித்துக் காட்டுகிறார். ஒரு பாடலில் பத்திக்கே வழிகாட்டிப் பாவந்தீர்த்துப் பண்டை வினைப் பயமான எல்லாம் போக்கித் தித்தித்தென் மனத்துள்ளே ஊறுந்தேனைச் செங்காட்டங் குடியதனிற் கண்டேன் நானே'' என்று கூறுகிறார். ''திருகு குழல் உமை'' என்று அம்பிகையின் திருப்பெயரை ஒரு பாடலில் குறிக்கிறார்.

பெரிய புராணத்தில் சேக்கிழார், திருஞான சம்பந்தர் புராணம், திருநாவுக்கரசர் புராணம், சிறுத்தொண்டர் புராணம் முதலியவற்றில் இத்தலத்தைப் பற்றிக்கூறியிருக்கிறார். சிறுத்தொண்ட நாயனார் புராணத்தில் 88 பாடல்கள் உள்ளன. மாமாத்திரர் குலத்தில் பிறந்த பரஞ்சோதியார் சேனைத் தலைவராகப் பல்லவனிடம் அமர்ந்திருந்து, வாதாபிக்குப் படையெடுத்துச் சென்று அந்நகரைஅழித்து வாகை சூடித் திரும்பினார். அவர் சிவபெருமான் திருத்தொண்டர் என்பதையறிந்த அரசன் நிதிக்குவை நல்கி, திருத்தொண்டு செய்து கொண்டிருக்கும்படி வேண்டிக்கொள்ள அவரும் தம்மூரான திருச்செங்காட்டங்குடிக்கு வந்து கணபதீச்சரப் பெருமானை வழிபட்டு வருவராயினர். சிவபெருமான் பைரவர் வேடத்துடன் அவர் மனைக்கெழுந்தருளி, பிள்ளைக்கறியமுது அளிக்கும்படி கேட்டார். சிறுத்தொண்டரும் தன் மகன் சீராளனை அவ்வாறே செய்து அடியார்க்கமுது படைக்க, அக்குழந்தையை எழுந்தருளச் செய்து தானும், உமாதேவி, முருகன் இவர்களுடன் காட்சி தந்தார். அறுபான்மூவமை நாயன்மார் சரிதங்களில் இந்த நாயனார் ஒருவர் வரலாற்றில்தான் சோமாஸ்கந்தராகப் பெருமான் தோன்றியதைக் காண்கிறோம். மற்றவற்றில் பார்வதியொடு மாத்திரம் காட்சி வழங்கியதைப் பார்க்கிறோம். சேக்கிழார், இறைவன் நாயனார் முன் தோன்றியதை, ''மலை பயந்த தையலோடுஞ் சரவணத்துத் தனயரோடும் தாமணைவார்'' என்று கூறியிருக்கிறார் தானும் உமாதேவியும் சிறுத்தொண்டருக்கும் அவர் மனைவியார் திருவெண்காட்டு நங்கைக்கும் அருள் புரியவும், முருகன் சீராளதேவர்க்கு அருள் புரியவும் தோன்றியது போல அமைந்திருப்பது சிந்தித்து மகிழ்தற்குரியது.

பட்டினத்தார் ''வாளால் மகவரிந்தூட்ட வல்லேனல்லேன்'' என்றும் ''நின்முதல் வழிபடத் தன் மகன் தடிந்த தொண்டர் மனையில் உண்டாய் போற்றி'' என்று சொல்கிறார். நம்பியாண்டார் ''விரும்பும் புதல்வனை மெய்யரிந்தாக்கிய— சிறுத்தொண்டனை ஏத்துதிரேல் சுரும்பின் மலர்த் தமிழாகரன் பாதத்தொடர் வெளிபத'' என்று கூறியிருக்கிறார். பரணதேவர் ''சிவானந்தஞ்செல்கதிக்கோர் என்று தொடங்கும் பாடலில் செங்காட்டங்குடியைக் குறிக்கிறார் - திருக்களிற்றுப் படியாரில்

''வரங்கள் தரும் செய்ய வயிரவர்க்குத் தங்கள்
கரங்களினால் அன்று கறியாக்க-இரங்காதே
கொல்வினையே செய்யுங் கொடுவினையேயான
வற்றை
வல்வினையே என்றதுநாம் மற்று''

என்ற ஒரு பாடல் படித்தின்புறத்தக்கது.

காளமேகப்புலவர் :

''காலனையும் காமனையும் காட்டும்
சிறுத்தொண்டர் தரு
பாலனையு கொன்ற பழிபோமோ-சீலமுடன்
நாட்டிலே வீற்றிருந்த நாதரே நீர்திருச்செங்
காட்டிலே வீற்றிருந்தக்கால்.''

என்று நகைச்சுவைபடக் கூறுகிறார். சொக்கநாதப் புலவர், பின்வரும் பாடலைப் பாடியிருக்கிறார்.

''மெய்யிலே ஒருபாதி உமைக்களித்த
செங்காட்டு விமலனாரே
மையிலே தோய்ந்த விழிச்சந்தனமான்
தலைக்கறியை வளமாயாவின்
நெய்யிலே தான்சமைத்துக் கொடுத்திருந்தும்
படைத்திருந்தும் நீர்தானின்று
கையிலே மழுவெடுத்தாற் பொய்யாமோ
பிள்ளை கொன்ற களவு தானே.''

போற்றிக் கலிவெண்பாவில், ''வைரவராய் வந்தவற்கு வாளான் மகவை யரிந்தூட்டி மகிழ்சிந்தாச் சிறுத்தொண்டர் சீர்போற்றி''. என்று கூறப்பட்டிருக்கிறது. அருணகிரிநாதர் பாடியருளிய ''வங்கார மார்பிலணி'' என்று தொடங்கும் திருப்புகழில்

''எண்டோளர் காதல்கொடு காதல்கறியேபருகு
செங்காடு மேவிபிர காசமயில் வேலழகொ
டென்காதல் மாலைமுடி ஆறுமுகவா அமரர்
பெருமாளே''

என்று கூறியிருக்கிறார்.

சைவ எல்லப்ப நாவலர் பாடியதாகச் சொல்லப்படும் தலபுராணச் செய்யுள் ஓலைச் சுவடியாக இருக்கிறது; அச்சாகவில்லை. பாயிரம் முதல் அபிடேகச் சருக்கம் ஈறாக 22 சருக்கங்கள் உள்ளன. அதிலிருந்து எடுத்துக் காட்டாக அம்பிகையின் மீது பாடப்பெற்ற ஒரு திருப்பாட்டு காண்க.

''கங்காட்டுங் கரங்களத்துக் கறைகாட்டும்
பிறைமவுலிக் கடவுள் மாலோ
டங்காட்டு நான்முகனை ஐங்கரனை
அளித்த பேதை (அறுமுகனை
சங்காட்டும் புனற்கரஞ்சேர்க் காவேரி வளங்
தமிழ் நன்னாட்டிற் (காட்டு
செங்காட்டங் குடிவாய்த்த திருக்குழலி
சென்னி சேர்ப்பாம்.'' (உபயபதஞ்

இது சேக்கிழாரின் சிறுத்தொண்டர் புராணத்தின் முதல்பாட்டான ''உருநாட்டும்'' என்று தொடங்கும் பாடலை நினைவூட்டுவதாக அமைந்திருக்கிறது. முன்னோர் மொழி பொருளை பொன்னே போல் போற்றவேண்டும் என்று எண்ணிய ஆசிரியரின் பெற்றிதான் என்னே! என்னே!

வாலாம்பிகை தாசர் என்ற சோழபுரத்துப் கவிஞர் இத்தலத்துப்பெருமான் மீது அமுது படைச் சிந்து என்ற இயற்றிருப்பதாகத் தெரிகிறது இத்தலத்தைபபற்றி இன்னும் பல தனிப்பாடல்களும் உள்ளன.

தெற்குவீதி மேல்கோடியில சிறுத்தொண்டர் தனிக்கோயில் இருக்கிறது. அக்கோயில் வாயில் மேல் உத்திராபதியார் உருவம் காணப்படுகிறது. உத்திராபதியார் அமர்ந்த கோலத்திலும், திருவெண்காட்டுநங்கை கிண்ணம் கரண்டியுடன் உணவு பரிமாறும் தோற்றத்திலும் காணப்பெறுகின்றனர். காடவர் கோனின் உருவமும் அங்கே உள்ளது.

கி.பி. 642-ல் வாதாபி சண்டை முடித்து, கணபதி யுருவத்தைச் சிறுத்தொண்டர் இங்கே கொண்டு வந்து அமைத்ததால் இக்கோயில் மிகப் பழைய கோயில் என்பது புலனாகும். அழகிய பல சிற்பங்கள் இக்கோயிலில் இருக்கின்றன. நவதாண்டவ மண்டபத்தில் உள்ள புஜங்கலளிதர், கஜசம்மாரர், ஊர்த்துவ தாண்டவர், காலசம்பாரர், கங்காளர், தாருகாவன பிட்சாடனர், திரிபுரசம்மாரர், பைரவர், முதலிய மூர்த்திகளின் சிலைகளில் சிற்பக்கையின் அழகு ததும்பி நிற்கிறது. இந்த எட்டு மூர்த்தங்களுடன் உத்தரா பதீசுவரரையும் சேர்த்தால் நவதாண்டவமூர்த்திகள் ஆவர். உத்திராபதியார் சந்நிதிக்கெதிரில் சிரமேல் கரங்கூப்பி நிற்கும் சிறுத்தொண்டர் அவர் மனைவி, சீராளன், தாதி இவர்களின் படிமங்கள் பார்க்கப் பார்க்க பக்தி பரவச மூட்டுவன. வாதாப் கணபதியின் அமைப்புத் தனிப்பட்டது. சிறுத்தொண்டர் கைலாசம் செல்லும் காட்சியைச் சித்திரிக்கும் சிற்பம் கண்டு மகிழத்தக்கது.

இந்த திருக்கோயிலில் அரிய செய்திகளைத் தெரிவிக்கும் பல கல்வெட்டுகள் இருக்கின்றன. அவை, இராஜராஜன், இராஜாதிராஜன், இராஜேந்திரன், பரகேசரிவர்மன், மூன்றாம் இராஜராஜன்,குலோத்துங்கசோழன்பராக்கிரம பாண்டியன், விஜயநகர வீரவிருப்பண்ண உடையார், வீரபூபதிராய உடையார் முதலிய மன்னர்களின் காலத்தவை. ஜெயமாணிக்க வளநாடு, சத்திரிய சிகாமணி வளநாடு, மும்மடி சோழ வளநாடு என்டவற்றின் உள் பகுதியான மருகல் நாட்டில் உள்ளது திருச் செங்காட்டங்குடி என்று அவை குறிக்கின்றன.

இறைவனை கணபதீச்சுவரம் உடைய நாயனார், கணபதீச்சரமுடைய மாகதேவர், திருச்செங்காட்டங்குடி பரமேசுவரர், உத்திராபதி நாயகர், உத்திரா பதீசர் முதலிய பெயர்களால் அக்கல்வெட்டுக்கள் குறிக்கின்றன. அம்பிகையின் பெயர்சூளிகாம்பாள் என்றும்காணப்படுகிறது. நிலம் வழங்கியது. விளக்கு கொடுத்தது, பூசை, விழா முதலியவற்றிற்கு அளித்ததை விவரிக்கின்றது. கோயிலுக்கு சிங்காசனம் கொடுத்த வணிகர்களுக்கு நிலம் வீடுகள் வழங்கியது. வரியிலலாமல் நிலம் கோயிலுக்கு விற்றது, சீராளதேவன் கோயிலுக்கு நந்தா விளக்கெரிக்க மருகல் சபையார் நிலம் விலைக்கு வாங்கி வழங்கியது, சிறுத் தொண்டர் கோயிலுக்கு நிலம் அளித்தது. செங்கழுநீர் திருப்பள்ளித் தாமம் சாத்தியருளவும், திருநந்தவனம் ஆக்கவும் இறையிலியாக நிலம் வழங்கியது. திருச்செங்காட்டாங்குடியிலுள்ள சீராளப் பிள்ளையாரை சிறுத்தொண்டர் மண்டபத்திலிருந்து திருமருகலுக்கு ஊர்வலமாகக் கொண்டு போவதற்கு நிலம் விலைக்கு வாங்கிக் கொடுத்தது, சீராள தேவரின் வழி பாட்டுக்காகத் திருக்கோயில் நிலங்களுககு வரி விலக்குச் செய்தது, சித்திரைப்பரணி நாளில் வடக்கிலிருந்துபைரவ வேடங் கொண்டு வந்த உத்திராபதியார் தமது பக்தரான சிறுத்தொண்டருக்கு முக்தி கொடுக்கும் திருவிழாவில் 'திருமுத்து வாளெரி'' என்ற மண்டபத்தில் உத்திராபதி நாயகருக்கு ஆராதனை நடத்த நிலம் வழங்கியது, கோயில் மேஸ்திரியான இராஜேந்திர சோழ ஆச்சாரியனுக்கு நிலம் கொடுத்தது, ஒவ்வொரு மாத பரணி நாட்களிலும் பூசை நடைபெற ஏற்பாடு செய்தது, கோயிலின் பிராகாரம் கட்டுவதற்கும் அதைச் சுற்றி சாலை அமைப்பதற்கும் நிலங்கள் உரிமையாக்கப் பெற்றது, மாளுவ தேசச் சக்கரவர்த்தியின் வேண்டுகோளின்படி உத்திராபதி நாயகர் கோயிலில் உற்சவங்கள் நடத்துவதற்கு வரிப் பணம் வழங்கியது. கோயிலில் சீராளன் சிறுத்தொண்டன் மடம் இருந்தது, சித்திரை ஐப்பசி மாதங்களில் பஜனை நடத்த ஏற்பாடு செய்தது இவை போன்ற பல அரிய செய்திகளை அக்கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. இத்தகையபெருமை வாய்ந்த அருள் மிகு உத்திராபதியார் திருவடிகளைப் பற்றி பிறவிப் பயன் அடைவோமாக!

போலி ஞானிகள்

''சில பாடல்களை மனப்பாடம் செய்து ஒப்பிப்பவர்கள், சில புத்தகங்களைப் புரட்டிப் பார்த்தவர்கள், பத்துப் பேரோடு மேடைகளேறி கல்வியின் பெருமிதத்தில், மந்திரவாதி வாயிலிருந்து நூலிழையை முடிவில்லாமல் வெளிக் கொணருவது போல, ஏற்கனவே நெட்டுருப் போட்டதையெல்லாம் மூச்சுவிடாமல் நீள நீளப் பேச்சுக்களாக உருட்டி மணிக்கணக்காக அளப்பவர்கள் இவர்களெல்லாம் ஞானி என்று சொல்லிக் கொள்ள முடியாது. தங்களைத் தாங்களே ஞானி என்று பட்டம் சூட்டிக் கொண்டு திரிகின்ற போலிகள் நிறைய இன்று இருக்கிறார்கள். அவர்கள் உடுத்தியிருப்பது என்னவோ காவி; ஆனால் அவர்களது உள்ளங்கள் பாவி. வெறுங்கற்கள் ஒளி வீசும் மணிகளாகுமா? கல்லெல்லாம் மாணிக்க கல்லாகுமா? செங்கல்லைச் செம்பொன் என்று எவன் எடைபோடுவான்? அறியாதவர்கள் தாம் இதிலெல்லாம் ஏமாந்து போவார்கள். அவர்கள் பொன்னையும் கண்டவர்களில்லை; மண்ணையும் கண்டவர்களில்லை.

— ஸ்ரீசத்தியசாயிபாபா

கீதைக் குறள்கள்

அறநெறியண்ணல் கி. பழநியப்பனார்

7. தியான யோகம்

தன்கடனைப் பற்றற்றுத் தப்பாது செய்வோனே
உண்மைத் துறவியா வான் (6-1)

ஏற்புடை ஓமமும் ஏற்றபல் கர்மமும்
ஆற்றான் துறவியா கான் ('')

சந்நியா சத்தையே யோகமெனச் சாற்றுவர்;
அந்நிலை பற்றுவிட்டோர் பேறு. (6-2)

நற்றுணையாம் கர்மத்தால் நல்யோகம் பெற்றோர்கள்
பெற்றபின்கர் மத்தைவிடு வர். (6-3)

தொழிலைப் பொருளைத் துறந்துமனவேகம்
ஒழித்தோனே நல்யோகி யாம். (6-4)

பிறர்தர வாரா பிணைப்பும் பகையும்
பெறலாம் முயன்றே உயர்வு. (6-5)

அடங்கிய ஆன்மாநல் நண்பனாம்; மற்றும்
அடங்காஆன் மாபகைவ னாம். (6-6)

இன்பதுன்பம் வெப்பதட்பம் இன்னும் புகழிகழ்
தன்மனத்தை வென்றோர்க் கிலை. (6-7)

ஆய்ந்த அறிவும் அநுபவ ஞானமும்
வாய்ந்தவர்க்குச் சலனம் இல். (6-8)

கலக்கமிலா யோகிக்குக் கல்மண்பொன் யாவும்
புலனடக்கால் ஒன்றெனத்தோன் றும்(')

நண்பனும் மாற்றானும் நல்லவனும் கெட்டவனும்
உண்மையாம் யோகிக்கொன் றாம் (6-9)

உடலையும் உள்ளத்தை யுமகட்டித் தூய
இடத்தில் தியானித்தல் நன்று. (6-10)

தூயதனி யோரிடத்தில் தர்ப்பைமான்தோல் துணி
மேயவுயர் ஆசனத்தைத் தேர். (6-11)

ஆன்மாதூய் மைபெற ஐம்பொறியுடன் மனத்தை
ஆன்றடக்கிச் செய்கதியா னம். (6-12)

தலைகழுத்து தன்னுடல் நேராம் வகையில்
நிலைநிறுத்தி மூக்குமுனை நோக்கு. (6-13)

அமைதியுடன் அஞ்சாது நல்விரதம் காத்துத்
திண்மையுடன் என்னைநினை நன்று (6-14)

இத்தகையோர் என்பால் மனமொன்றி நின்றிடின்
முத்தி பெறுவர் இனிது. (6-15)

உறக்கமும் ஊணும் மிகுந்தாலும் அன்றிக்
குறைந்தாலும் யோகம்கிட் டாது (6-16)

உணவு உறக்கம் உடற்பயிற்சி செய்தொழில்
இணங்குமள வாயினில்லை துன்பு. (6-17)

ஆய்ந்து மனமடக்கி ஆசைவிட்டு, ஆன்மாவில்
தோய்ந்தோனே நல்யோகி யாம். (6-18)

காற்றில்லா நேரம் கலங்காச் சுடர்போன்று
மாற்றமின்றிச் செய்கதியா னம். (6-19)

தன்னை உணர்ந்து தவத்தில் நிறைவுற்ற
நன்மனம் சாந்தி பெறும். (6-20)

தெளிந்து புலன்கடந்து தேர்ந்த நிலையை
எளிதில் விடான்யோகி மற்று (6-21)

துன்பம் மிகவரினும் தொய்யான் பிருமநிலை
ஒன்றையே மேலெனக்கண் டோன். (6-22)

துன்பத்தில் சற்றும் துவளாமை யோகமென
நன்றுமுயல் ஊக்கத் துடன். (6-23)

மனத்தெழும் ஆசைகளை மாய்த்தபின் நன்று
மனத்தால் புலன்களைக் கட்டு. (6-24)

ஆன்மாவின் பாலுன் அறிவை நிறுத்திப்பின்
ஆன்றமனத் தாலுன்னுள் நோக்கு (6-25)

சென்ற இடத்துச் செலவிடா(து) உன் மனத்தை
வன்மையாய்க் கட்டுப் படுத்து. (6-26)

அமைதியும் கட்டுண்ட ஆசையும் பெற்றோர்
அமைவர் பிருமமாய் ஆங்கு. (6-27)

ஆன்மதியானத்தால் அகன்றிடும் பாவங்கள்;
ஆன்றஇன் பும் கிட்டும் மற்று. (6-28)

பல்லுயிரைத் தன்னிடத்தே பார்த்துப் பின் தன்னையும்
பல்லுயிரில் யோகி காண் பான். (6-29)

R. RAJU,
Dy Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept



ஆறுபடை வீடுகளும் ஆதாரங்களும்.....!

மூலாதாரம்	—	திருப்பரங்குன்றம்
சுவாதிஷ்டானம்	—	திருச்சீரலைவாய் (திருச்செந்தூர்)
மணிபூரகம்	—	திருவாவினன்குடி (பழநி)
அநாகதம்	—	திருஏரகம் (சுவாமிமலை)
விசுத்தி	—	குன்றுதோறாடல் (திருத்தணி)
ஆக்ஞை	—	பழமுதிர்ச்சோலை (அழகர்மலை)

எல்லாம் எனதுருவாய்க் கண்டபின் என்னுள்ளே
எல்லாம்காண் போனைநீங் கேன். (6-31)

ஒருவனாய்ப் பல்லுயிராய் நிற்குமெனை மெய்யாம்
பொருளெனக் காண்போன்என் நட்பு. ('')

பிறருற்ற இன்பதுன்பம் தன்னதாய்க் கொள்வோன்
சிறந்தவோர் யோகியா வான். (6-32)

(குறிப்பு:— ''மதுசூதனா! என்னால் மனத்தைச் சமநிலையில் நிறுத்த முடியுமென்று தோன்றவில்லை. மனத்தை அடக்குவது காற்றை அடக்குவது போன்றதாகுமே'' என்று கூறி அருச்சுனன் தளர்ச்சியடைகின்றான்.) (6-33-34)

அடங்கா மனத்தை அடக்க விரும்பின்
தடந்தோளா! ஊன்றி முயல். (6-35)

அடங்கா மனத்தான் அடையான் நல்யோகம்;
அடக்கும் வழியினைக் காண். (6-36)

(குறிப்பு:— அருச்சுனனின் ஐயப்பாடு; ''ஊன்றி முயற்சித்தும் யோகத்தில் மனம் வழுவியவன் கதி என்ன? சிதறுண்ட மேகம் போல் அவன் பயனற்று அழிந்து விடுவானா? இதனை விளக்க வல்லவர் உன்னையன்றி எனக்கு யார் உள்ளனர்'' என்று அருச்சுனன் கண்ணனைக் கேட்டான்) (6-37,38,39)

இருமையிலும் கேடில்லை என்றும் நலமே
தரும்செயலைச் செய்வோர் தமக்கு. (6-40)

தோல்வியுற்ற யோகி சுவர்க்கஇன்பம் துய்த்தபின்
மேற்குடியில் வாழ்வான் பிறந்து (6-41)

அல்லையெனில் யோகம் அறிந்தோர் நற்குடியில்
நல்லவனாய் வாழ்வான் பிறந்து (6-42)

முற்பிறவி வாசனை முன்னின்றே ஊக்கிடக்
கற்றவழி வாழ்வான் தொடர்ந்து. (6-43)

பிறந்ததும் யோகநிலை பின்தொடர அச்சீரார்
சிறப்பெய்தி பிர்மமா வர். (6-44)

பாவம்நீங் கிப்பின் பல்பிறப்பில் சீரடைந்து
சிவன் பெறும்பிருமப் பேறு. (6-45)

நற்தவசி நல்லறிஞன் கர்மநிலை யோகிக்கும்
நற்தியா னம்செய்வோன் மேல். (6-46)

என்னையே நாளும் தியானிப்போன் எஞ்ஞான்றும்
என்னுடைஎண் ணத்திலுயர்ந்தோன். (6-47)

—தொடரும்.

திருவிற்குடி வீரட்டானம்

''கோயில் கலைச் செல்வர்''

தி. இராசமாணிக்கம், பி.ஏ., பி.காம்.,

காவிரியின் தென்கரையில் உள்ள 74வது திருத்தலம் திருவிற்குடி. திருவாரூர் திருமருகல் பாதையில் (திருபயத்தங்குடி வழி) இந்தத் திருப்பதி உள்ளது.

''விரியும் மாமலர்ப் பொய்கை சூழ் மதுமலி
விற்குடி விரட்டம்'' (3)
''விண்ணலார் பொழில் மல்கிய மலர்விரி
விற்குடி வீரட்டம் (6)

என்றெல்லாம் இதன் இயற்கைச் செழிப்பினை சம்பந்தப் பெருமான் தம் திருப்பதிகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

புராணப் பெருமை

கடலில் எறியப்பட்ட சிவபெருமானது கோபம் ஒரு குழந்தையாக உருவெடுத்தது. அது சலத்தால் (கடலால்) வளர்க்கப்பட்டமையால், சலந்திரன் என்ற பெயரினைப் பெற்றது. ஒரு சமயம் அவன் சிவபெருமானை வெல்ல கயிலை சென்றான். அவ்வமயம் இறைவன் அவன்முன் கிழ அந்தணன் வடிவில் தோன்றி தன் திருவடியால் நிலத்தைக் கீற, அது சக்கரமாகியது. இறைவன் சொற்படி, அசுரன் தன் ஆற்றலைக் காட்ட அதைத் தன் தலையில் வைக்க, அது அவனை அழித்துவிட்டது. இது நடந்ததாகப் போற்றப்படும் தலம் தான் திருவிற்குடி.

இறைவனது முடிவாற்றலை உணர்த்தும் இச்செயலை அப்பர் பெருமான்தான் அதிக அளவில் போற்றியுள்ளார். (11 இடங்களில்)

ஏனைய அசுரர்கள் போலன்றி, சலந்திரன் தன்கையால் தானே அழிந்தான். கை என்ற சொல்லுக்கு ஒழுக்கம் என்ற பொருளும் உண்டு. ஒருவரை உயர்த்துவதும் தாழ்த்துவதும் அவரவர் ஒழுக்கமே. சலந்திரன் செருக்குற்றுதன் ஒழுக்கக்குறைவால்தன் அழிவைத்தானே தேடிக் கொண்டான். இது ஒருவருக்கு ஏற்படும் துன்பத்திற்கு அவரவரே காரணம் என்பதை உணர்த்துகிறது.

சமயமாண்பு

அடியராகி நின்று ஏத்தவல்லார் தம்மை
அருவினை அடையாவே''(1)
''விற்குடி வீரட்டம்
பிரிவிலாதார் பெருந்தவத்தோர் எனப்
பேணுவர் உலகத்தே'' (3)

எனச் சம்பந்தர் இந்தத் தலத்தின் சிறப்பினை தம் திருப்பதிகத்தில் வலியுறுத்துகிறார்.

திருக்கோவில்

மேற்கு நோக்கி அமைந்துள்ள இங்குள்ள கோயில் ஒரு திருச்சுற்றினைக் கொண்டது. இதன் வாயிலை 5 நிலை கோபுரம் அணி செய்கிறது. இறைவியின் பெயர் பரிமளாம்பிகை. (தூயதமிழில் ஏலவார் குழலி எனப்படும்) இறைவன் பெயர் வீரட்டநாதர் என்பனவாம். கோயிலுக்கு முன்னால் சங்கு தீர்த்தமும், பின்னால் சக்கர தீர்த்தமும் உள்ளன.

இந்தக் கோயிலுக்குப் பின்னால் இன்னொரு கோயில் உள்ளது. அது திருமயானேசுவரர் கோயில் எனப்படுகிறது. சலந்திரன் மனைவி விருந்தை உயிர்நீத்த இடமாக இது கருதப்படுவதால், இது பெருமை மிகுந்த மயானம் என்றும், இறைவனது பெயர் திருமயானேசுவரர் என்றும் பெயர்பெற்றனவாகச் சொல்லப்படுகிறது. துளசிதான் இங்கு தலமரம்.

இந்தக் கோயில் நாட்டுக்கோட்டை நகரத்தாரால் திருப்பணி செய்யப்பெற்று 1931 இல் திருக்குடமுழக்கு விழா நடைபெற்றுள்ளது. எனவே இது பழமையான கோயில் கட்டிட அமைப்பினைக் கொண்டதன்று.

கலைச் சிறப்பு

இங்கு காணவேண்டிய சிறப்பு மிக்க வடிவம் சலந்தராசுரவதமூர்த்தியாம். ஆகம விதிகளுக்கு மாறாக இந்தச் செப்பு படிமத்திற்குக் கைகள் அமைக்கப்பட்டுள்ளன. பின் இருகைகளில் மழுவும் மானும் எங்கும் உள்ளது போல் இருக்க, முன் இடக்கைமேல் நோக்கிய நிலையிலும், முன் வலக்கையில் சக்கரமும் அமைக்கப்பட்டுள்ளதில் சலந்திரன் உடலை இரு கூறாகப் பிளந்தபின், சக்கரம் இறைவனைச் சென்றடைந்தது என்பதைக் குறிக்கவே இங்குள்ள வடிவில் கையில் சக்கரப் உருவாக்

கப்பட்டுள்ளது. இதைத்தான் கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் தம் கந்தபுராணத்தில்

''பரிதியங்கடவுள் அப்பதகன் தன்னுடல் இருபிளவாக்கியே இறைவன் தன்னிடை உருவுகொண்டு உற்றது'' (6-13-267)

எனக் குறிப்பிட்டுள்ளார்.

கஜசம்ஹாரமூர்த்தி, திரிபுராந்தகமூர்த்தி போன்று இந்த வடிவை வேறு ஆலயங்களில் காண்பது அரிது. ஆகம விதிப்படி அமைக்கப்பட்ட இந்த வடிவை காண வேண்டுமென்றால் கர்நாடக மாநிலத்தைச் சார்ந்த நஞ்சன்கூடு என்ற தலத்தில் உள்ள நஞ்சுண்டேசுவரர் திருக்கோயிலுக்குச் செல்ல வேண்டும்.

இறைவனார்க்கு இனிக்குமோ இப்பூசை....?

கையொன்று செய்ய விழியொன்று நாட கருத்தொன்று எண்ண
பொய்யொன்று வஞ்சகநா வொன்று பேச புலால்கமழும்
மெய்யொன்று சார செவியொன்று கேட்க விரும்பும்யான்
செய்கின்ற பூசை எவ்வாறு கொள்வாய் வினை தீர்ப்பவனே !

—பட்டினத்தடிகள்.

கைகள் ஒரு பணி செய்ய, விழிகள் வேறு ஒன்றைக் காண, கருத்தோ ஆயிரமாயிரம் கற்பனையில் ஈடுபட, உள்ளத்தோடு ஒன்றாமல் வாய் மந்திரங்கள் முணுமுணுக்க, உடலும் பூசனையை நாடாது - வேறு நாட்டம் கொண்டு வாட, காதுகளும் வெளியே என்ன யார் பேசுகிறார்களோ என்று அலைமோத ஐம்புலன்களின் ஒருமைப்பாடு இன்றி எளியேன் செய்யும் பூசையும் பூசையாமோ? இப்பூசையை இறைவனும் ஏற்பதுண்டோ? என வினவுகிறார் பட்டினத்தடிகளார்.



கம்பன் கவிநயமணி **வே. தியாகராஜன்**

(18)

மதுரையை அனந்தகுணபாண்டியன் என்ற அரசன் ஆண்ட காலத்தில் சைவம் தழைத்து விளங்கியது. அது பொறாத சமணர்கள் பாண்டியனை அழிக்க எண்ணி ஒரு பெரிய வேள்வி செய்தனர். அந்த வேள்வித் தீயினின்றும் அரக்கன் ஒருவன் தோன்றி, ''அதிகப் பசியுடனிருக்கும் என்னை எதற்காக அழைத்தீர்கள்?'' எனக் கேட்க, ''மதுரையையும் பாண்டியனையும் அழித்து வருக'' என ஏவினர். அவ்வரக்கன் ஒரு பாம்பின் உருவெடுத்து மதுரையை நோக்கி வர, மக்கள் அரசனிடம் வந்து ஒரு பெரும் பாம்பு வருவதை நடுக்கத்துடன் கூறினர். ''முன்னமே யானையை அனுப்பிய சமணர் இன்று ஒரு பாம்பை ஏவியுள்ளனர் போலும்'' என எண்ணிப் பாம்பணியும் பரமனான சோமசுந்தரப் பெருமானின் திருக்கோயிலையடைந்து ''இறைவனே, உம்மை மறவாது குலதெய்வமாக வணங்கி வரும், உமது திருவருள் துணையுடன் அரசு புரிந்து வரும், என் நகரத்தையழிக்கச் சமணர்களால் ஏவப்பட்ட பாம்பு வருகிறது. அதனை வெல்ல அருள் புரிய வேண்டும்.

"வழிவழியடிமை செய்து ஒருபோதும் மறவலன்
வழிபடுமடியேனின்
மொழிவழிமுறை செய்து வருவேன்; இம்மூது
நகரடையவும் அமணீசர்
அழிவது கருதினர் விடுநாகமடைவதன்
அருள்வழி அதன் ஆவி
கழிவது கருதிய அடியேனைக் கருணை
செய்தருள் இதுகடன் எனறான்''

இவ்வாறு இறைவனிடம் வணங்கி அனுமதி பெற்ற பாண்டியன் வில் அம்பு முதலானவற்றுடன் மேற்கு வாசலையடைந்த போது பாம்பு எதிர்ப்பட்டது. பாண்டியன் விட்ட அக்கினிக்கணைகளை அது விழுங்கியது. பாண்டியன் ஒரு அர்த்தசந்திர பாணத்தை விட்டான். பாம்பு இடிபோன்ற குரலுடன் இரத்தம் கக்கிக் கொண்டதுடன் கொடிய விஷத்தைக் கக்கிக் கொண்டே இறந்தது. மதுரை பூராவும் அவ்விஷம் பரவ மக்கள் துன்பமடைந்தனர். பாண்டியன், விஷத்தினால் மக்கள் வருந்துவது கண்டு, கோயிலையடைந்து ''இறைவனே! மதுரையைக் கடல் அழிக்க வந்த காலத்தும், வருணன் மழையை ஏவி மதுரையழிக்க முயன்ற காலத்தும், சமணர் யானையை ஏவிய போதும் மதுரையைக் காப்பாற்றினாய். இன்று மதுரையை அழிக்க வந்துள்ள விஷத்தினின்றும் காக்க வேண்டும்'' என வேண்டினான்.

''தென்னவன் விடங்கண்டு அஞ்சுமால்
போல; சினகரமடைந்து தாழ்ந்து 'எந்தாய்!
முன்னவ! ஆதி முதல்வ! வித்தின்றி
முளைத்தவ!
முடிவிலா முனிவ!
என்னவை! அன்பர்க்கு எளியவ! யார்க்கும்
இறையவ இந்நகர்க்கு என்றும்
மன்னவ! அநாதி மறையவ! முக்கண்
வானவ! உனைச் சரணமடைந்தேன்.
அடுத்தவந் தழிக்கும் ஆழியைத் துரந்தும்
ஆழிஉண்டு ஏழும் ஒன்றாகத்
தொடுத்து வந்தலைக்கும் பெருமழை தடுத்தும்
துளைக்கைக் விண்டுழாவெண்பிறைக் கோடு
எடுத்து வந்தலைக்கும் களிற்றினை
விளித்தும்; இந்நகர் புரந்தனை; இன்று
மடுத்து வந்தலைக்கும் விடத்தினால் மயக்கும்
வருத்தமும் களைதி என்றிரந்தான்''.

பாண்டியனின் முறையீடு கேட்ட பரமன் தனது திருமுடியிலிருந்த சந்திரனின் அமுதத்திலிருந்து சிறிது சிந்தியருள, அது நகரமெங்கும் பரவி மதுரையைத் தூய்மை செய்தது.

திருநகரம் கண்டபோதே இறைவன் தனது மதிக்கலையால் சாந்தி செய்தவர் என்பதாலேயே மதுரை எனப்பெயர் வந்தது. இருமுறைகள் சிவபெருமானால் சாந்தி செய்யப் பற்ற திருத்தலம் என்பது குறிப்பு.

பாம்பு அழிந்தது கண்ட சமணர்கள் 'பசுவை ஏவினால் பசுவதைப் பாவத்திற்கு



அஞ்சுவர். பசு உருவில் ஒரு அரக்கனை ஏவுவோம்'' என ஒரு வேள்வியில் பசு உருவமான அரக்கன் ஒருவனை உண்டாக்கி அனுப்பினர். உலகத்தை அழிப்பது மாதிரி, பசு சீற்றத்துடன் மதுரையை நோக்கி வர, பாண்டியனும் மதுரை மக்களும் மதுரை ஆலயத்தை அடைந்து

''நாதமுறையோ! பொதுவின் மாறி நடமாடும்
பாதமுறையோ! பல உயிர்க்கும் அறிவிக்கும்
போதமுறையோ! பரிபூரண புராண
வேதமுறையோ என விளித்து முறையிட்டார்''

இறைவன் பசுவை வென்று வருமாறு தன் எதிரிலே இருந்த நந்தி தேவரான காளையை ஏவினார். நந்தி தேவர் பசுவைக் கொல்லாது, அதன் எதிரிலே தனது அழகைக் காட்ட, பசு தன் வசமிழந்து காளையின் அழகில் மயங்கியதுடன், தனது உருவை விட்டு மலையாக மாறியது. அதுவே இன்று மதுரை அருகிலுள்ள பசுமலை, இடபமும் தன் உருவை மலையாக்கி விட்டு இறைவனிடம் வந்தது. இதுவே இன்று சோலை மலை, ரிஷப மலை என்றெல்லாம் அழைக்கப்படுகிறது. பாண்டியனும் மக்களும் மகிழ்வடைந்து மதுரைக் கோயிலை யடைந்து இறைவனையும் நந்தியையும் வணங்கினர். இராமபிரான் இலங்கை செல்லும் வழியில் இடபமலையில் தங்கினார். அகத்தியர் அங்கு வந்து சோமசுந்தரப் பெருமானின் பெருமைகளை இராமபிரானுக்கு அறிவுறுத்தினார். இராமபிரான் சிவபெருமானை இத்தலத்தில் பூசித்தார். பலவிதமாகத் தோத்திரம் செய்த போது, ''இராம! நமக்குத் தென்கிழக்குத் திசையில் சேதுகட்டி தருமத்தை மீறிய இராவணனைக் கொன்று சீதையை அடைந்து அயோத்தி திரும்புவாயாக'' எனக் கூறினார்.

''இரவிதன் மரபின் வந்த ராம! மகன்;
எமக்குத்தென்கீழ்
விரவிய திசையிற் போகி விரிகடற் சேதுகட்டி
கரவிய உள்ளக் கள்வன் கதிர்முடிபத்தும் சிந்தி
அரவ மேகலையினாளை அருஞ்சிறை
அழுவநீக்கி
மீண்டுநின் அயோத்தி எய்தி விரிகடல் உலகம்
பன்னாள்
ஆண்டினி திருந்து மேனாள் வைகுண்டம்
அடைவாயாக
ஈண்டுநீ கவலைகொள்ளேல் எனும் அசரீரி
கேட்டு
நீண்டவன் மகிழ்ந்து தாழ்ந்து நிருத்தனை
விடைகொண்டேகி''

இறைவன் கூறிய வண்ணமே இராவணனை வதம் செய்து மதுரை நாயகனைச் சீதையுடன் தரிசித்த இராமபிரான் அயோத்தியை அடைந்து அரசு புரிந்தனர். இராமபிரானுக்கும் அருள்புரிந்த இறைவன் சோமசுந்தர மூர்த்தி என்பது வரலாறு.

(தொடரும்)

அமிந்திர முனிவருக்கு உரியது இந்நெல்லிமரம் ஆறாண்டுக்கு ஒரு கனிய காய்க்கும். முனிவர் உண்டு ஆறாண்டு பசியின்றி இருப்பார்.
இன்று முனிவர் கனி உண்ணும் நாள். பசியோடு வரும் முனிவர் கனியைக் காணா விட்டால், இதை அபகரித்த உனக்கு என்ன சாபம் கொடுப்பாரோ அது எமக்குத் தெரியாது.
சித்திர பாரதம் கவ: செவ்வேள் ப: MN ராஜு
சீடர்கள் கூறிய விவரம் கேட்டு அருச்சுனனும் துரோபதையும் மனக் கலக்கம் அடைகிறார்கள்.
இப்பொழுது என்ன செய்யலாம்
அண்ணாவிடம் போய் ஆலோசிப் போம்
அண்ணா அறியாது செய்த என் பிழையைப் பொறுத்தருள வேண்டும்
வீமன் ஓர் உபாயம் கூறுகின்றான்.
முனிவர் இருக்கும் இடம் நாமே தேடிப்போய் நிகழ்ந்ததைக் கூறிக்கனியை அவரிடம் கொடுத்து விட்டால் என்ன?
அது சரியில்லை!
நகுலன் ஓர் உபாயம் கூறுகிறான்.
துருவாசரின் சாபத்திலிருந்து நம்மைக் காத்த கண்ணனை இப்பொழுதும் நாம் அழைப்போம்
நகுலன் ஆலோசனையை ஆமோதிக்கும் தருமர் ஸ்ரீ கிருஷ்ணரைத் தோத்திரம் செய்ய, கண்ணபெருமானும் உடன் பிரசன்னர் ஆகிறார்
"கலக்கம் விடு தருமா! முனிவர் காணும் முன்பாக கனியை மரத்திலேயே பொருந்தச் செய்து விடுவோம்."
இது ஆகக் கூடிய காரியமா கண்ணா?



ஏன் ஆகாது? நீங்கள் அறுவரும் உங்கள் உள்ளத்தில் உள்ளதை ஒளிக்காமல் சொன்னால் கனி பொருந்திக் கொள்ளும்
எந்தக்கிளையில் கனி முன்பு பொருந்தி இருந்ததோ அதற்குக் கீழே கனியை வைக்கிறார் கண்ணபிரான்
தருமா நீ சொல்!
தருமமும், சத்தியமும், பொறுமையும் வெல்லும். பாவமும், பொய்ம்மையும் கோபமும் தோற்கும். இது என் உள்ளத்தில் உள்ளது கண்ணா.
தருமர் மெய்யுரை கேட்டு கனி கிளையை நோக்கி ஒரு பாகம் மேலேறுகிறது.
"பிறர் மனையாள் தாய்க்குச் சமம். பிறர் பொருள் எட்டிக் காய்க்குச் சமம்" இது வீமன்.
"உயிரினும் சிறந்தது மானம். மானம் உடையவரே மேலோர்." இது அருச்சுனன்.
"மலருக்குச் சிறப்பு மணம். மனிதருக்குச் சிறப்பு கல்வி. கல்வியில்லாதவர் கசடர்" இது நகுலன்
"சத்தியம் தாய், அறிவே தந்தை. தருமம் சகோதரன், கருணையே தோழன். சாந்தம் மனைவி, பொறுமையே மைந்தன். இவை ஆறு குணங்களும் உற்ற துணை" இது சகாதேவன்.
மகாவீரர்களான கணவர் ஐவர் இருந்தும் நான் அவமானமுற்றேன். துரியோதனன், துச்சாதனனைக் கொன்றால் அன்றி நான் வீரபத்தினி ஆகேன்" திரௌபதை இவ்வாறு கூற கனி முன்னிருந்த கிளைக்கே போய் ஒட்டிக் கொண்டு விடுகிறது.

டாக்டர் திருமுருக கிருபானந்தவாரியார்

(53)

பிரமதேவர் திருமணச் சடங்குகளைத் தொடங்கலானார். உடனே இறைவன் திருவுருமறைந்தருளினார்.

அருள்வடிவமாகிய இறைவன் திடீர் என்று மறைதலும் திருமணப் பேரவையில் ஒரு பரபரப்பு ஏற்பட்டது. தட்சனுக்கு அதிர்ச்சியுண்டாயிற்று. தேவரும் மூவரும் முனிவரும் முத்தரும் சித்தரும் கின்னரரும் கிம்புருடரும் உருகரும் நாகரும் சாரணரும் குழுமியிருந்தார்கள். அந்த அவையில் மாப்பிள்ளை மறைந்து விட்டால் எப்படியிருக்கும்? தட்சனுடைய தலையில் இடிவிழுவது போன்ற கலக்கம் ஏற்பட்டது. ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். திருவருளின் செயலை உணரவல்லார் யார்?

பெற்ற நிதியை யிழந்தது போல் உலகன்னையாகிய தாட்சாயணி பெருந்துயர் உழந்தாள். பொருக்கென எழுந்து பாங்கியர் கூட்டத்தில் சென்று விம்மி உருகி அழுதாள். இறைவனை நினைந்து தொழுதாள்.

''உயிர்த்தனள் கலுழ்ந்தனள் உணர்வு மாழ்கியே
அயர்த்தனள் புலர்ந்தனள் அலமந் தங்கமும்
வியர்த்தனள் வெதும்பினள் விமலன் கோலமே
மயிர்த்தொகைப் பொடிப்புற மனங்கொண்
டுன்னுவாள்.''

''எம்பெருமான் என்னை விட்டு மறைந்தார் எனில் என்தவம் குறைவு என்றுதான் கருதுதல் வேண்டும்'' என்று தேவி ஆவிசோர அலமந்தாள்.

வேதவல்லி தாட்சாயணியின் கண்ணீரைத் துடைத்துத் தழுவி ''அம்மா! மேலும் தவஞ் செய்; சிவம் அருளும்'' என்றாள். அம்மை தான் முன் செய்த தவச்சாலையில் சென்று சிவத்தை நோக்கித் தவத்தை மேற்கொண்டாள். மாலயனாதி வானவர்கள் மருண்டு நின்றார்கள்.

தட்சன் மிகவும் சினந்தான். நாசியில் விரல் வைத்துச் சிரத்தையசைத்தான். கரங்கொட்டி உக்கிரமாகச் சிரித்தான். ''என்னே சிவனுடைய செய்கை? தாரை வார்த்துக் கொடுத்தேன். திருமணச் சடங்கு தொடங்கும் போது மறைந்தான். பித்தன் என்பதனைப் பேருலகறியச் செய்துவிட்டான். எனக்குப் பெரிய அவமானத்தைச் செய்தான். இதைவிட பழி என்ன இருக்கின்றது?'' என்றெல்லாம் கூறி உள்ளம் நொந்தான். மாலயனாதி வானவர்கட்கு விடை கொடுத்து அனுப்பினான்.

சாலநாள் கழிந்த பின் சிவபெருமான் தவமுனிவராய் வந்து, தாட்சாயணிக்குக் காட்சி தந்தார். அம்பிகையை யெடுத்துத் தன் இடப்புறத்தில் வைத்து விடை மீது வந்த விமலன் கயிலை மலைசேர்ந்தார். இதைக் கண்ட பாங்கியர் அதிசயம் அடைந்தார்கள்.

பாங்கியர் தட்சனிடம் வந்து பணிந்து ''அண்ணலே! சிவமூர்த்தி தவ முனிவராக வந்து தாட்சாயணிக்குத் தன் திருவுருவக்காட்சி தந்து விடையின்மீது எடுத்து வைத்துச் சென்றார்'' என்று கூறினார்கள்.

இதைக் கேட்ட தட்சனுக்கு நெருப்பில் நெய்விட்டது போல் மேலும் சினம் பொங்கி எழுந்தது. மனம் புழுங்கினான். தன்னை வணங்க வந்த தேவர்களைப் ''பார்த்து அமரர்களே! அரன் செயலைக் கண்டீர்களா? தாய் தந்தையரின் அனுமதியின்றி என் தவப் புதல்வியைக் கவர்ந்து சென்றான். இது யார் செய்கின்ற காரியம்? சிவன் என்றால் எதையும் செய்வதா? என்னை மதியாது இவ்வாறு செய்தான்'' என்று கூறி நொந்து கொண்டான். செய் நன்றி மறந்த தட்சன் அது முதல் சிவமூர்த்தியை நினைத்தானில்லை. மேலும் நிந்தனையும் செய்து கொண்டிருந்தான்.

பிரமதேவர் ஏனைய தேவர்களுடன் கூடி சிந்திப்பாராயினார், 'சிவத்தை வேண்டித் தவத்தைச் செய்து தட்சன் உயர்வு பெற்றான். நன்றி மறந்து எம்பிரானை இகழ்கின்றான். விரைவில் அழிவான். நாம் தட்சனுக்கு அஞ்சி அவனிடம் ஏவல் புரிகின்றோம். அதனால் நமக்குத் தீங்கு விளையும். ஆதலால் தட்சனைச் சமாதானம் செய்து வைத்தால் அவனுக்கும் நமக்கும் உய்வு உண்டாகும்'' என்று எண்ணினார்.

எல்லோரும் தட்சனிடம் வந்து ''தட்சப் பிரசாபதியே! உன் வாழ்வுக்கு மூல காரணம் நீல கண்டன் திருவருளேயாகும். நீ அவரைப் பகைப்பது நல்லதல்ல. குற்றம் பார்த்தால் சுற்றம் இல்லை. எனவே நீ திருக்கயிலாய மலை சென்று சிவபெருமானைக் கண்டு சமாதானம் அடைந்து வாழ்வாயாக'' என்று கூறினார்கள்.



R. RAJU,
Dy Commissioner H.Qrs
(Retired)
HR&CE Administration Dept.

தட்சன் அமரர்கள் இன்னுரைக்கு இணங்கினான். திருக்கயிலை மலையையடைந்து திருநந்திதேவர் உறையும் கோபுர வாயிலைச் சேர்ந்தான். அவன் உள்ளத்தில் இறைவன் அகிலலோக நாயகன் என்றும் அம்பிகை அகிலாண்டங்களையும் ஈன்ற அன்னையென்றும் எண்ணம் உண்டாகவில்லை. அம்பிகையை மகள் என்றும் மகாதேவனைத் தன் மருகன் என்றும் எண்ணி தருக்குடன் தலை நிமிர்ந்து சென்றான். காவல் பூதர்கள் அவனைத் தடுத்து நிறுத்தினார்கள். ''ஏய்! நில் எங்கள் அனுமதியின்றி உள்ளே செல்லக்கூடாது'' என்றார்கள்.

தட்சன் ''காவல் பூதர்களே! இது என் மகள் வாழும் இடம். சிவன் என் மருகன். நான் மாமனார், என்னைத் தடுக்க நீங்கள் யார்?'' என்றான். இதைக் கேட்ட பூதர்கள் சிரித்தார்கள். ''பேதையே! உன் அறிவிருந்தவாறு என்னே! அகிலாண்டங்களையும் ஈன்ற மாதா உன் தவத்திற்கு இரங்கி மகளாக வந்தாள். ஒரு தாய் தன் குழந்தையைப் பார்த்து என்னைப் பெற்ற செல்வமே' என்ற அழைப்பாள். அக்குழந்தையா அவளைப் பெற்றது? மூடனே நீ உய்ய வேண்டும் என்று கருணையால் கழறுகின்றோம். உன் செருக்கை விடுத்து இறைவனையடுத்து, வினை தணிந்து, பரமபதியின் பாதம் பணிந்து சுகப்படுவாய். இல்லையேல் இந்த இடத்தைவிட்டு விரைந்து உன் இருப்பிடத்துக்கு போ'' என்று வெகுண்டு விளம்பினார்கள்.

இதைக் கேட்ட தட்சன் நாணினான். அவர்களைக் கடந்து உள்ளே செல்ல மாட்டாதவனாய் நின்று கூறுகின்றான்.

''காவல் பூதர்களே! எனக்கு நாராயணனும் நான்முகனும் ஏவல் புரிகின்றார்கள். நான் ஒரு போதும் உங்கள் சிவனைப் பணிய மாட்டேன். இனி சிவனை யாரும் பணியாமல் இருக்கும்படிச் செய்குவன்'' என்று உளன்று கூறிவிட்டுத் தன்னகரம் சேர்ந்தான்.

தட்சன் பிரமாதி தேவர்களைப் பார்த்து ''தேவர்களே! உங்கள் சொல்லைக் கேட்டு நான் கயிலை சென்று காவல் பூதர்கள் தடுக்கப் பெரிய அவமானத்தையடைந்தேன். அதைச் சொல்ல என் உள்ளம் நாணுகின்றது. ஆதலால் இன்று முதல் நீங்கள் யாரும் சிவனை வணங்க்கூடாது. சிவனை மதிக்கக்கூடாது. என்னை மதியாத பித்தனை நீவிர் யாரும் புகழக்கூடாது. என் கட்டளையை மீறுவீராயின் உங்கள் பதவிகளையும் உரிமைகளையும் அழித்துவிடுவேன்'' என்றான். தட்சனுடைய கட்டளைக்கு இணங்கிய அமரர்கள் அவனை அஞ்சலித்து அகன்றார்கள்.

தேவர்கள் யாவரும் தட்சனுடைய ஆணையை மறுக்க முடியாதவர்களாய் வேதனையடைந்தார்கள்.

பிரமதேவர் ஒரு வேள்வியைச் செய்யத் தொடங்கினார். 'இதனால் எனக்கு மரணமே நேர்ந்தாலும் நான் சிவமூர்த்திக்கு முதலில் அவிர்ப்பாகம் தந்து சிவனருள் பெறுவேன்'' என்று எண்ணினார். தன் புதல்வர்களை அழைத்து ''நீங்கள் போய் திருமால் முதலிய அனைவரையும் அழைத்து வாருங்கள்'' என்று கட்டளையிட்டார். திருக்கயிலை மலைக்குச் சென்று, நந்திதேவர் அருள் பெற்று உள்ளே போய் அம்மையப்பனை அன்புடன் அஞ்ச லித்து, ''அடியேன் செய்யும் வேள்விக்கு எழுந் தருள வேண்டும்'' என்றார்.

அந்திவண்ணர் புன்முறுவல் புரிந்து நமது நந்திதேவன் வருவான். நீ போய் வேள்வி செய்'' என்று கூறியருளினார்.

நான்முகக் கடவுள் அங்கிருந்து புறப்பட்டு தட்சனிடம் போய் ''நான் செய்யும் வேள்விக்கு நீ உன் சுற்றத்துடன் வருக'' என்று அழைத் தார்.

வேள்விச் சாலைக்குத் திருமால் முதலிய சகல தேவர்களும் வந்தார்கள். சிவமூர்த்திக் குத் தரும் அவிர்ப்பாகத்தைத் தடுத்துக் கெடுக்க வேண்டும் என்று எண்ணித் தட்சனும் தன் பரிவாரங்களுடன் வந்தான். பிரமதேவர் எழுந்து அவனை வரவேற்று அவனுக்கு ஓர் ஆசனந் தந்து அவனை அமரச் செய்தார்.

சிவபெருமான் நந்திதேவரை நோக்கி, ''நந்தி! நீ பிரமன் புரியும் வேள்விக்குச் சென்று நமக்குரிய அவியைப் பெற்று வருக'' என்று அனுப்பினார். வேள்விச் சாலைக்கு திரு நந்திதேவர் வந்தார். பிரம தேவர் துண்ணென எழுந்து நந்திதேவரைப் பணிந்து அவரை ஒரு மணித்தவிசில் இருத்தி னார். நந்திதேவருடன் வந்த பூதகணங்கட்கும் ஆசனந் தந்தார். வேள்வியைத் தொடங்கி னார்.

இதனைக் கண்ட தட்சன் பெரிதும் வெகுண்டான். ''சுடலையில் நடம் புரியும் சிவனுடைய காவலனும் பூதர்களும் இச்சபை யில் நடுநாயகமாக இருப்பது தகுமோ? நான் முகனே! நீ சென்று சிவனையழைக்கலாமா? இக்காவல் நந்தியை என் மூன் பணிந்து பீடத் தில் இருக்கச் செய்யலாமா! 'நீ தந்தை யாதலால மன்னிக்கின்றேன். இல்லையேல் உன் தலைகளைத் துணிப்பேன். அன்றி மயா னத்திலாடும் சிவனுக்கு முதலாவதாக அவிர்ப் பாகம் தரக்கூடாது. தர வேண்டும் என்று கூறும் வேதத்தை விலக்குங்கள்'' என்றான்.

இச் சிவ நிந்தையைக் கேட்ட திருநந்தி தேவர் இருகரங்களால் செவியைப் பொத்திக் கொண்டார். திருவைந்தெழுத்தைச் சிந்தித் தார். திரிபுரம் எரித்த சிவபெருமானுடைய கருணையால் தண்டு ஏந்திய சிலாத குமார ராம் நந்திதேவர் பெரிதும் சீற்றம் அடைந் தார். அதுகண்டு அனைவரும் அஞ்சினார்கள். மாலயனாதி வானவர்கள் நடுங்கினார்கள்.

இராமலிங்கர் வற்புறுத்திய பதவி

ப பசித்திரு - த் தனித்திரு - வி விழித்திரு

இவையே இராமலிங்கர் வற்புறுத்திய பதவியாகும்.

திருநந்திதேவர் தட்சனைப் பார்த்து; ''பேதையே! சிவநிந்தை செய்த வாயைக் கிழிப்பேன். சிவ மூர்த்தியின் கட்டளையில்லை யென்று உன்னை விட்டு விட்டேன். இனியொரு முறை சிவநிந்தை செய்தாயேல் உன்சிரத்தைத் துணிப்பேன். சிவமூர்த்திக்கு அவியில்லை என்று விலக்கினாய். சிவமூர்த்தியை விலக்கி வேள்வி புரிவோரது தலை அறுபடக் கடவது; தட்சனே! உன் சிரத்தைத் துணிப்பேன். சிவ மூர்த்தியை விலக்கி வேள்வி புரிவோரது தலை அறுபடக் கடவது, தட்சனே! உன் செல்வம் முற்றும் விரைவில் அழியக் கடவன; சிவநிந்தை செய்து உன் தலை அற்று, வேறு ஒரு சிறு தலை உண்டாகக் கடவது; உன்னை ஆதரிக்கும் இத்தேவர்கள் ஒரு நாள் மாண்டு மீண்டும் உய்வு பெறுக. சூரபன்மனால் இத் தேவர்கள் பல யுகங்கள் துன்புற்று வருந்தக் கடவது'' என்று சாபமிட்டுவிட்டுப் புறப்பட்டு கயிலைமலை சென்று, எல்லாவற்றையும் உமை யொருபாலரிடம் உரைத்துவிட்டுக் கோபுர வாயிலில் நின்றார்.

பிரமதேவர் அஞ்சி அத்துடன் அந்த வேள்வியை நிறுத்தி விட்டார். என் விளையு யுமோ என்று இமையவர் அஞ்சினார்கள். தட்சன் சிறிதுஅஞ்சித் தன்னகரம் போய்ச் சேர்ந்தான்.

பிரமதேவருடைய யாகம் பாதியில் தடை பட்ட பின் நந்தியம் பெருமானுடைய வெஞ் சாபத்துக்கு அஞ்சி, தேவர்களும் முனிவர்களும் அந்தணர்களும் யாகம் புரியாதிருந்தார்கள். தட்சன் பண்டைத் தீவினைப் பயனால் ஒரு நாள் தன் முன் இருந்த தேவர்களைப் பார்த்து ''தேவர்களே! நீங்கள் பல காலமாக யாகம் செய்யாது இருப்பதன் காரணம் யாது?'' என்று கேட்டான்.

தேவர்கள் ''பிரம குமாரரே! முன்னாள் பிரமதேவர் செய்த வேள்வியில் சிவமூர்த்திக்கு தரும் அவிர்ப்பாகத்தைத் தடுத்தீர். அதனா லும், நந்தி தேவருடைய சாப மொழியாலும் அஞ்சி நாங்கள் வேள்வி செய்வதில்லை'' என் றார்கள். இதனைக் கேடட தட்சன் நகைத்து ''நான் ஒரு பெரிய யாகம் செய்வேன். அது நன்கு முடியுமானால் பின்னர் நீங்கள் அதைப் பின்பற்றிச் செய்யுங்கள்'' என்று கூறினான். விச்சுவகன்மனையழைத்து ஒரு சிறந்த யாக சாலை அமைக்குமாறு கட்டளையிட்டான்.

—(தொடரும்)

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-600034
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M. A., Ph. D.,
அச்சிட்டோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002



குன்றத்தூரில் இந்து சமய அறநிலையத்துறை நிகழ்த்திய தெய்வச் சேக்கிழார் விழாவில் "பெரிய புராண நெறியைப் பின்பற்றாத சமுதாயம் குற்றம் உடையது" என்ற தலைப்பில் மாபெரும் வழக்காடு மன்றம் நடைபெற்றது. தமிழ்வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத் துறையின் செயலாளர் டாக்டர் ஔவை நடராஜன் அவர்கள் நடுவராக விளங்கினார். திருக்கோயில் ஆசிரியர் டாக்டர் த. அமிர்தலிங்கம் வழக்கினைத் தொடுக்க, பேராசிரியர் டாக்டர் தி. இராசகோபாலன் வழக்கினை மறுத்தார்.

R. RAJU,
Dy Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept.

திருக்கோயில் நிர்வாக வாரியத்தின் சிறப்புமிகு கூட்டம் 20-6-92 அன்று காலையிலும் மாலையிலும் தலைமைச் செயலகத்தில் சிறப்புற நடைபெற்றது. மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் இக்கூட்டத்திற்கு தலைமை வகித்தார்கள். தலைமைச் செயலாளர் திருமிகு டி. வி. வெங்கட்டராமன், ஐ.ஏ.எஸ். அவர்கள் அறநிலையத் துறைச் செயலாளர் திருமிகு தங்கராசு, ஐ.ஏ.எஸ். அவர்கள், அறநிலையத்துறை ஆணையாளர் திருமிகு துரை. சுந்தரேசன், ஐ.ஏ.எஸ். அவர்கள் உடன் உள்ளார்கள். திருக்கோயில் நிர்வாக வாரியத்தின் மாநிலக் குழுவின் உறுப்பினர்கள் காலையிலும், மாவட்டக் குழுக்களின் உறுப்பினர்கள் மாலையிலும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.